




www.tamilmirror.lk

# தமிழ் Mirror

WEDNESDAY, APRIL 13, 2022

புதன்கிழமை ஏப்ரல் 13, 2022 | ஒளி: 07 கதிர்: 281 | பக்கம்:08 | Free

எமது வாசகர்களுக்கு
புத்தாண்டு வாழ்த்துகள்





# இந்திய கடனுதவியை நீடிக்க பேச்சு

**அவசரகால மருந்துகளுக்கு உலக வங்கி உதவி**

இந்திய கடன் உதவியை மேலும் நீட்டிப்பது குறித்து கலந்துரையாடப்பட்டு வருவதாகத் தெரிவித்த நிதி அமைச்சர் அலி சப்ரி, பொருளாதாரத்தை மேம்படுத்த அனைத்து உத்திகளும் பின்பற்றப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மீள்செலுத்த வேண்டிய கடன்களின் கொடுப்பனவுகள்

# தற்காலிகமாக இடைநிறுத்தம்



**வெளிநாடுகளில் இருந்து அனுப்பப்படும் பணத்தை மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைக்காக மட்டுமே பயன்படுத்துவோம்**

**வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் உத்தியோகபூர்வ முறையில் நாட்டிற்கு பணம் அனுப்புங்கள்**

சர்வதேச கடன் தவணைகள் மற்றும் வட்டி, இலங்கையின் சகல அரச கடன்கள், இலங்கை அரசாங்கம் மீள் செலுத்த வேண்டிய கடன்களின் கொடுப்பனவுகளை இடை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டம் ஊடாக இலங்கையின் பொருளாதார தன்மைகளை மீளவும் வழமைக்கு கொண்டுவந்து மீள்கட்டமைப்பு செய்யப்படும் வரையில் இது அமுலில் இருக்கும் என்றும் அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் வாழ்த்துச் செய்திகள்

பிறந்திருக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்துகளை எமது வாசகர்களுக்கு தெரிவித்துக்கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றோம். ஜனாதிபதி, பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் வாழ்த்துச் செய்திகள், P3 P5.

## ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்

# 735 பேர் கைது; ரூ.365 மில். சொத்துகள் பறிமுதல்



ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இதுவரை 735 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 79 பேர் மீது 25,653 குற்றச்சாட்டுகளின் கீழ் 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு உள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# “அரசாங்கத்துடன் எந்த பேச்சுக்கும் இடமில்லை”

**ராஜபக்ஷர்கள் வேண்டாம் எனும் மக்களுடனேயே நாம் என்கிறார் மைத்திரி**

அரசாங்கத்தின் தவறான தீர்மானங்கள் மற்றும் கொள்கைகள் காரணமாக, சகல மக்களும் வீதிக்கு இறங்கி, ராஜபக்ஷ அரசாங்கமே வேண்டாம் என்ற கோஷம் எழுப்பிக்கொண்டுள்ளனர் என்று தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,

தொடர்ச்சி P2

## ஜனாதிபதியுடனான பேச்சை

# பழைய பங்காளிகள் பகிஷ்கரித்தனர்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடனான சந்திப்பை பகிஷ்கரிப்பதற்கு அரசாங்கத்தில் அங்கம் வகித்த 11 பங்காளிக் கட்சிகள் உட்பட அரசாங்கத்தில் இருந்து விலகி, சுயாதீனமாக இயங்கும் 40 எம்.பிக்கள் தீர்மானித்துள்ளனர். ஜனாதிபதி மற்றும் சுயாதீன பாராளுமன்றக் குழுவின் பிரதிநிதிகளுக்கு இடையிலான இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தை நேற்று (12) இரவு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் நடைபெறவிருந்தது.

தொடர்ச்சி P2

# “ஔடதங்கள், உபகரணங்களுக்கு தட்டுப்பாடு இல்லை”

**சுகாதார அமைச்சு தெரிவிப்பு**

அரச வைத்தியசாலைகளில் ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்களில் பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதாக சமூக ஊடகங்களில் இந்த நாள்களில் பரந்தளவில் தகவல்கள் பரப்பப்பட்டு வரும் தகவல்களை சுகாதார அமைச்சு மறுத்துள்ளது.

அரச வைத்தியசாலைகளில் போதுமானளவு ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங்கள் காணப்படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

# கைதிகளைப் பார்வையிட விசேட அனுமதி



தமிழ், சிங்கள புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நேற்று (12) முதல் எதிர்வரும் 16ஆம் திகதி வரையில் சிறைச்சாலைகளில் உள்ள கைதிகளைப் பார்வையிடுவதற்கு விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இப்புதுவருட காலத்தில் சிறைச்சாலையில் உள்ள கைதி ஒருவரை அவரது மூன்று உறவினர்கள் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதோடு, வீடுகளில் சமைத்து எடுத்துவரப்பட்ட உணவுப் பொதிகள், இனிப்பு வகைகளைக் கைதிகளுக்கு வழங்குவதற்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களின்படி இந்த விசேட அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் தலைமையகம் அறிவித்துள்ளது.



# பொலிஸாருக்கு 2,500 ரூபாய் பரிசு

பொலிஸாரின் அனைத்து சேவைகளையும் பாராட்டி, 2,500 ரூபாயை பரிசாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ்மா அதிபர் சீ.டீ. விக்ரமரத்ன தெரிவித்துள்ளார். பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் ஆகியோருக்கு நேற்று முன்தினம் (11) இது தொடர்பான சுற்றுநிரூபம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் ஆபத்துகளையும் பொருட்படுத்தாது கொரோனா வைரஸ் காலப் பகுதியில் பொலிஸார் சிறப்பாக செயற்பட்டதால் பல வெற்றிகளைப் பெற முடிந்துள்ளதாகவும்,

தொடர்ச்சி P2

# புதிய வியூகத்தை கையிலெடுக்கும் ‘கை’

**தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கைகோர்க்க ஆராய்வு**

அரசாங்கத்தின் மீதான பொதுமக்களின் அதிருப்தியை அடுத்து, நாட்டில் நாளாந்தம் போராட்டங்கள் அதிகரித்துக் கொண்டே செல்கின்ற நிலையில், ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி தலைமையிலான சுயாதீன உறுப்பினர்கள், மாற்று வெளித்திட்டமொன்றை கையாள தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இந்நிலையில், புத்தாண்டின் பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளுடன் கலந்துரையாடி அவர்களையும் அரசாங்க எதிர்ப்பு செயற்பாடுகளில் ஈடுபடுத்த ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி

தொடர்ச்சி P2

## வெளிநாட்டு கடன்களை

# செலுத்துவது நிறுத்தம்; ஐ.தே.க வருத்தம்

**இக்கட்டான நிலையிலும் இடுப்பு பட்டியை இறுக்கி வழங்கினோம்**

அனைத்து வெளிநாட்டுக் கடன்களையும் திருப்பிச் செலுத்துவதை இடைநிறுத்தப் போவதாக அரசாங்கம் அறிவித்துள்ளமை குறித்து ஐக்கிய தேசிய கட்சி வருத்தம் தெரிவித்துள்ளது. எமது கடனை திருப்பிச் செலுத்துவதில் இலங்கை சுதந்திரம் அடைந்ததில் இருந்து கறைபடாத சாதனையைப் பெற்றுள்ளது என்று கட்சியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# என்னை வீட்டுக்கு அனுப்பிவிட்டு கோட்டா கோ ஹோம் என்கிறார்கள்

**மே மாதத்துக்குப் பின்னர் இந்திய கடன் உதவித் தொகை நிறைவடையும். நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும்**



ஆட்சி மாற்றம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் என்று பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் நினைக்கிறார்கள் எனவும் ஆனால், நாட்டின் இளைஞர்களோ அரசியல் மாற்றம் ஒன்று ஏற்பட வேண்டும் என நினைக்கிறார்கள் எனவும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எம்.பி தெரிவித்தார்.

19ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்கிறார்கள். அவ்வாறு கொண்டுவருவதால் ஜனாதிபதியிடம் இருக்கும் அமைச்சுப் பதவிகள் பறிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# மக்கள் ஆணை வாதம் எடுபடாது

**பிரதமரிடத்தில் சுமந்திரன் எடுத்துரைப்பு**



நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை நீக்குவதற்கான நடவடிக்கை எடுப்பதுடன் அதனை நீக்கும் கால வரையறையை குறிப்பிட்டு அதற்கமைய நடவடிக்கை எடுப்பதும், விரைவில் பொதுத்தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் உடனடியாக கையாள்வதால் மட்டுமே இப்போதுள்ள அரசியல்

தொடர்ச்சி P2

# இடைக்கால அரசாங்கம் சாத்தியமற்றது



11 கட்சிகள் முன்வைத்த இடைக்கால அரசாங்கம் சாத்தியமற்றது என்ற காரணத்தாலேயே தாம் இராஜாங்க அமைச்சுப் பதவியை ஏற்றுக்கொண்டதாக இராஜாங்க அமைச்சர் சாந்த பண்டார, நேற்று (12) தெரிவித்தார்.

சேதனப் பசளை உற்பத்தி, மேம்பாடு மற்றும் விநியோக ஒழுங்குபடுத்தல், நெல், தானிய வகைகள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம், உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழில்நுட்ப கமத்தொழில் இராஜாங்க அமைச்சராக சாந்த பண்டார,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# இந்திய கடனுதவியை நீடிக்க பேச்சு

ஏற்கெனவே உலக வங்கியிடம் உதவி கோரப்பட்டுள்ளதாகவும், கடன்களை மறுசீரமைப்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார். அவசரகால மருந்துகளை கொள்வனவு செய்வதற்கு 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை உடனடியாக வழங்குவதற்கு உலக வங்கி அனுமதி வழங்கியுள்ளது எனவும் நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார். உலக வங்கி அதிகாரிகளுடனான கலந்துரையாடலைத் தொடர்ந்து அனுமதி வழங்கப்பட்டதாக அவர் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்தார். அவசரகால மருந்துகள் மற்றும் எரிவாயு உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கு இரண்டு வாரங்களுக்குள் உலக வங்கி மேலும் 500 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கவுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

# பொலிஸாருக்கு 2,500 ரூபாய் பரிசு

உலகளவில் கொரோனா வைரஸ் பரவி வந்திருந்த நிலையிலும் குற்றச்செயல்களை தடுக்கப் பொலிஸார் நடவடிக்கை எடுத்ததாகவும் பொலிஸ்மா அதிபர் பாராட்டியுள்ளார்.

இதனைக் கருத்திற்கொண்டு அனைத்துப் பொலிஸாருக்கும் 2,500 ரூபாய் பணப் பரிசை வழங்குவதற்கு தான் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பொலிஸ் பயிற்சிக் கல்லூரிகளில் பயிற்சி பெற்று வரும் பொலிஸ் அதிகாரிகள், 6 மாதக் காலப் பயிற்சியை நிறைவு செய்யாதவர்கள், பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள அதிகாரிகள் ஆகியோருக்கு இத்தொகை வழங்கப்படாதெனவும் பொலிஸ்மா அதிபரின் சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தற்காலிகமாக...

சர்வதேச கடன் தவணைகள் மற்றும் வட்டி, இலங்கையின் சகல அரச கடன்கள், இலங்கை அரசாங்கம் மீள் செலுத்த வேண்டிய கடன்களின் கொடுப்பனவுகளை இடை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டம் ஊடாக இலங்கையின் பொருளாதார தன்மைகளை மீளவும் வழமைக்கு கொண்டுவந்து மீள்கட்டமைப்பு செய்யப்படும் வரையில் இது அமுலில் இருக்கும் என்றும் அறிவித்துள்ளார்.

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் உத்தியோகபூர்வ முறையில் நாட்டிற்கு பணம் அனுப்புமாறு கேட்டுக்கொண்ட மத்திய வாங்கி ஆளுநர், அவ்வாறு அனுப்பப்படும் பணத்தை கடன்களை செலுத்தவோ ஏனைய அனாவசிய செயற்பாடுகளுக்கு செலவு செய்யப்படாது எனவும் மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைக்காகவும் ஏனைய அத்தியாவசிய செயற்பாடுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

நிதி அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆகியன இணைந்து கொழும்பில் நேற்று (12) நடத்திய செய்தியாளர் சந்திப்பின் போதே இந்த விடயங்களை அவர் தெரிவித்துள்ளார். இது குறித்து

மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவிக்கையில்,

சர்வதேச கடன் தவணைகள் மற்றும் வட்டியை தற்காலிகமாக இடை நிறுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது குறித்து உரிய தரப்புடன் கலந்துரையாடி கடன் மீள் கட்டமைப்பிற்கு செல்லவும் முயட்சிகள் எடுக்கப்படுகின்றன என மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்திருந்தார்.

இலங்கையின் தற்போதைய நெருக்கடி நிலைமையில் சர்வதேச கடன்களை செலுத்த முடியாதுள்ளதாகவும், கடன்களை மீளவும் செலுத்துவதை விடவும் மக்களுக்கான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக்கொள்ளவே முக்கியத்துவம் கொடுக்க வேண்டியுள்ளது எனவும் தெரிவித்துள்ள அவர், நாட்டிற்கு தேவையான எரிபொருள்,எரிவாயு, மருந்து பொருட்கள், உணவு போன்றவற்றை பெற்றுக்கொள்ள உரிய நிதியை பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அதேபோல் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கையர்கள் உத்தியோகபூர்வ முறையில் நாட்டிற்கு பணம் அனுப்புமாறு கேட்டுக்கொண்ட மத்திய வாங்கி ஆளுநர், அவ்வாறு அனுப்பப்படும் பணத்தை கடன்களை செலுத்தவோ ஏனைய அனாவசிய செயற்பாடுகளுக்கு செலவு செய்யப்படாது எனவும் மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைக்காகவும் ஏனைய அத்தியாவசிய செயற்பாடுகளுக்காக மட்டுமே பயன்படுத்தப்படும் எனவும் தெரிவித்திருந்தார்.

நிதி அமைச்சின் செயலாளர் எம் .எம் சிறிவர்தன கூறுகையில்,

சுதந்திரத்தின் பின்னதான காலப்பகுதியில் இருந்தே வெளிநாட்டு கடன் கொடுப்பனவுகளை செலுத்துவதை தவிர்த்துக்கொண்டதில்லை. எனினும் இன்றைய கொவிட் நெருக்கடி நிலைமை மற்றும் யுக்ரேன் -ரஷ்ய மோதல் காரணமாக ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் உள்ளிட்ட மேலும் சில அண்மைக்கால சம்பவங்கள் காரணமாக அரச நிதி தன்மை மிக மோசமான நிலைமையை எதிர்கொண்டுள்ளது. கடந்த வார நடுப்பகுதியில் சர்வதேச நாணய நிதியத்தின் மூலமாக இலங்கையின் கடன் நிலைமைகள் உறுதியானதாக இல்லை என்பதை அடையாளப்படுத்தியிருந்தனர். இந்த நெருக்கடியான நிலையில் இலங்கையின் பொருளாதார தன்மைகளை மீளவும் வழமைக்கு கொண்டுவரும் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதுடன் அவசர நிதி உதவிகளை பெற்றுக்கொள்ள சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது. இலங்கையின் கொள்கைக்கமைய சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புக்களை பெற்றுக்கொள்ளும் பொருத்தமான பொருளாதார வேலைத்திட்டத்தை உருவாக்கிக்கொள்ளும் அதே வேளையில் பொறுப்புகளை சமமாகவும், முறையாகவும் முன்னெடுக்கும் மீள் கட்டமைப்பு வேலைத்திட்டம் ஒன்றினை உருவாக்கிக்கொள்ளும் வரையில் இலங்கையின் சகல அரச கடன்களையும்

இலங்கை அரசாங்கம் மீள் செலுத்த வேண்டிய கடன்களின் கொடுப்பனவுகளையும் இடை நிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஏப்ரல் 12ம் திகதிக்கு முந்திய சாதாரண கடன்கள் அனைத்தும், அவை சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதார மறுசீரமைப்பு திட்டம் ஊடாக மீள்கட்டமைப்பு செய்யப்படும் வரையில் மீள செலுத்தப்படாது. குறிப்பாக வெளிநாட்டு கடன்கள், நாணய பரிமாற்ற ஒப்பந்தம், உள்நாட்டு பெரு நிறுவனங்களிடம் பெறப்பட்டவை போன்ற சாதாரண கடன்கள் அனைத்தும் இதில் உள்ளடங்குகின்றன. எனினும் ஏப்ரல் 12க்கு பிந்திய புதிய கடன்களுக்கு இந்த அறிவிப்பு செல்லுபடியாகாது எனவும், அவை மீள செலுத்தப்படும் எனவும் நிதியமைச்சின் செயலாளரால் தெரிவித்துள்ளார்.

## 'ஔடதங்கள், உபகரணங்களுக்கு தட்டுப்பாடு இல்லை'

மேல் மாகாண அரச வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற, தட்டுப்பாடு காணப்படுவதாக கூறப்படும் ஔடதங்கள் மற்றும் சத்திரசிகிச்சை உபகரணங களின் தரவுகள் அடங்கிய அறிக்கையொன்றினை வெளியிட்டு சுகாதார அமைச்சு இதனை உறுதி செய்துள்ளது.

# 735 பேர்...

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக இதுவரை 735 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்களில் 79 பேர் மீது 25,653 குற்றச்சாட்டுகளின் கீழ் 27 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு ள்ளதாகவும் பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்தார்.

பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் முன்னேற்றம் குறித்து ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பின் போதே பாதுகாப்புச் செயலாளர் இதனைத் தெரிவித்தார்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் பல்வேறு நபர்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு வருவதாகவும், பொறுப்பான அரச அதிகாரிகள் என்ற வகையில் உண்மைகளை மக்களுக்கு தெரியப்படுத்துவது அவர்களின் பொறுப்பு எனவும் தெரிவித்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகள் முறையாக மேற்கொள்ளப்படவில்லை என்ற கூற்றை அவர் நிராகரித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களுடன் தொடர்புடைய சந்தேக நபர்களிடமிருந்து 365 மில்லியன் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் அம்பலப்படுத்தினர்.

சந்தேகநபர்களிடம் இருந்து 165 மில்லியன் ரூபாய் தங்கம் மற்றும் பணமும் கைப்பற்றப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, நேற்று (12) ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய 68 நபர்கள் வர்த்தமானி அறிவித்தல் மூலம் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் குறிப்பிட்டார்.

# செலுத்துவது...

இக்கட்டான சமயங்களில் கூட ஒரு தேசமாக நாங்கள் எங்கள் இடுப்பு பட்டியை இறுக்கிக் கொண்டு பணம் செலுத்தியுள்ளோம். ஆனால், அரசாங்கத்தின் தவறான நிர்வாகத்தால் தற்போதைய பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அனைத்து வெளி சேவைகளையும் இடைநிறுத்துவது, கடன் கடிதங்களை எளிதாக்குவதற்கு வெளிநாட்டுக் கடன்களைப் பெற்ற வங்கிகள் மற்றும் சர்வதேச இறையாண்மைப் பத்திரங்களை வைத்திருப்பவர்களுக்கும் தேவையற்ற அழுத்தத்தைக் கொண்டுவரும் என்றும் ஐ.தே.க சுட்டிக்காட்டியுள்ளது.

2020 ஆம் ஆண்டு முதல் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது நிதிக் கடமைகளை மறுசீரமைக்க சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு பரிந்துரைக்கப்பட்டது. இந்த அறிவுரையை நிறைவேற்ற காலதாமதம் செய்வதால், நெருக்கடி ஏற்படும் சூழல் உருவாகியுள்ளது. ஐ.தே.க மற்றும் ஏனையவர்கள் விடுத்த அழைப்புகளுக்கு செவிசாய்த்திருந்தால் இந்த நிலையைத் தவிர்த்திருக்கலாம். சர்வதேச நாணய நிதிய நிதியைப் பெறுவதற்கு முன்னர் நாணய மதிப்பைக் குறைக்கும் தீர்மானத்தையம், இந்த நிலைக்கு வழிவகுத்த நாட்டின் கடனை மறுசீரமைப்பதைத் தாமதப்படுத்தும் அரசாங்கத்தின் தீர்மானத்தையும் விசாரிப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஸ்தாபிக்குமாறு ஐ.தே.க கோரியுள்ளது.

# 'அரசாங்கத்துடன் எந்தப் பேச்சுக்கும் இடமில்லை'

இந்த மக்களுடனேயே ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி செயற்படும் எனவும் ராஜபக்ஷ அரசாங்கத்துடன் எந்த பேச்சுவார்த்தைக்கும் இடமில்லை எனவும் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட பிரதிநிதிகள் மாநாடு நேற்று இடம்பெற்ற போதே ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறுகையில், "நாட்டில் மிக மோசமான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டுள்ளதையடுத்து அதனுடன் தொடர்புபட்ட சமூக பிரச்சினை உருவாகியுள்ளது. சமூக பிரச்சினை அரசியல் பிரச்சினையாக மாறியுள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளில் இந்த அரசாங்கம் மேற்கொண்ட தவறான தீர்மானங்களின் காரணமாக இன்று பாரிய பிரச்சினை உருவாகியுள்ளது.

குறிப்பாக உரம் விடயத்தில் எடுத்த தவறான தீர்மானம் அடுத்தடுத்த சகல பிரச்சினைகளிலும் தாக்கத்தை செலுத்தியது. அதுவே நாட்டு மக்கள் இன்று வீதிக்கு இறங்க காரணமாகவும் அமைந்துள்ளது.

அதுமட்டுமல்ல, எமக்கு உதவிய சர்வதேச நாடுகள் இன்று எம்மை புறக்கணித்துள்ளனர். இந்த அரசாங்கம் பல தவறுகளை செய்வதனால் எம்மால் உதவ முடியாதென சர்வதேச தூதுவர்கள் என்னிடம் தெரிவித்தனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளை பெற்றுக்கொள்ள வேண்டும் என்றால் நாட்டில் ஜனநாயகம், மனித உரிமைகள், ஊடக சுதந்திரம் பேணப்படும் நிலைமை வெளிப்பட வேண்டும். நாட்டில் மக்கள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்.

எனினும் இன்றைய நிலைமை அவ்வாறானதாக இல்லை. நாளுக்கு நாள் நாடு நாசமாக்கிக்கொண்டே செல்கின்றது. கடந்த ஓர் ஆண்டுக்கும் அதிக காலமாகவே இந்த நிலைமைகளை கருத்தில் கொண்டு அரசாங்கத்தால் இருந்து விலக கலந்துரையாடி வந்தோம். எனினும் ஏதேனும் ஒரு விதத்தில் எமது யோசனைகளை கொண்டு மக்களுக்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கலாம் என்ற நம்பிக்கையில் அதற்கான முயற்சிகளை எடுத்தோம்.ஆனால் கடந்த ஒன்றரை மாதத்தில் நான்கு பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

தற்போதைய நெருக்கடிக்கு பல்வேறு யோசனைகளையும் முன்வைத்தோம். ஆனால் அவற்றையும் அரசாங்கம் நிராகரித்த காரணத்தினால் தான் அரசாங்கத்தால் இருந்து விலக தீர்மானம் எடுத்தோம்.

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமை குறித்து பாராளுமன்றத்தில் மூன்று நாள்கள் விவாதம் நடத்தப்பட்டது. ஆனால் இந்த விவாதத்தில் அரசாங்கம் எதிர்கட்சிகளின் எந்தவொரு கருத்தையும் கருத்தில் கொள்ளாது சபையில் கூச்சல் குழப்பம் விளைவித்ததை மட்டுமே அவதானிக்க முடிந்தது. அரசாங்கம் மக்களின் செயற்பாடுகளை கருத்தில் கொள்வதாகவே தெரியவில்லை. ஆகவே இந்த நிலைமையில் அரசாங்கத்துடன் எந்தவொரு கணக்குவழக்கும் எமக்கிடையில் இருக்காது. எந்தவொரு எழுத்துமூல இணக்கமும் இருக்காது.

எந்தவொரு விதத்திலும் அரசாங்கத்துடன் தொடர்பை வைத்துக்கொள்ள நாம் தயாரில்லை. அரசாங்கத்திற்கு கடிதம் எழுதியதும் போதும், அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியதும் போதும். இனிமேல் எதற்கும் இடமில்லை" என்றார்.

# மக்கள் ஆணை வாதம் எடுபடாது

நெருக்கடிக்கு தீர்வு கிடைக்கும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஊடகப்பேச்சாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கு அறிவுரை வழங்கியுள்ளார்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதிக்கு ஆணையை வழங்கிய மக்கள் அதைத் திரும்பப்பெறுகின்றோம் என்பதை வெளிப்படுத்தவே வீதிக்கு இறங்கியுள்ளனர். ஆகவே, மக்கள் ஆணை என்ற வாதம் இனியும் எடுபடாது என்பதை தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் சுமந்திரன் எம்.பிக்கும் இடையில் நேற்று முன்தினம் அலரிமாளிகையில் சந்திப்பொன்று இடம்பெற்றிருந்தது. இரவு 7.30 மணி முதல் 8 30 மணி வரை இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமைகளை கையாள மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்கள் குறித்து பிரதமர் சுமந்திரன் எம்.பியிடம் வினவியுள்ளார். இந்த நிலைமைகளை கையாள வேண்டிய வேலைத்திட்டங்கள் என்ன என்பது குறித்து தாம் ஏற்கெனவே பல தடவைகளில் சுட்டிக்காட்டியதாகவும், பொருளாதார நெருக்கடி அரசியல் நெருக்கடியாக மாறியுள்ளது குறித்து தாம் சகல அரசியல் கட்சிகளுடனும் கலந்துரையாடி வருவதாகவும் சுமந்திரன் எம்.பி பிரதமரிடத்தில் எடுத்துக் கூறியுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அதேபோல் அநுர பிரியதர்ன யாப்பா உட்பட்ட சுயாதீன அணியினர் தம்மோடு பேச்சு நடத்தி இருப்பதையும், ஜே.வி.பி உள்ளிட்ட ஏனைய சகல தரப்புடனும் தாம் கலந்துரையாடியுள்ளதாகவும் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிக்கும் நடவடிக்கையை அரசாங்கம் தானே முன்வந்து முன்னெடுப்பதாக அறிவித்து, அதனை மேற்கொள்வதுதான் சரியான தீர்வாக இருக்கும் என்பதையும் எடுத்துக்கூறியுள்ளார்.

# புதிய வியூகத்தை கையிலெடுக்கும் 'கை'

தீர்மானித்துள்ளதாக கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நாம் இன்று ஆளுந்தரப்பு உறுப்பினர்களும் அல்ல; எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அல்ல. நாம் சுயாதீனமாக எமது கருத்துகளை முன்வைத்து அவசியமான வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவே நினைக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

சுயாதீனமாக செயற்படும் ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி, அரசாங்கத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் செயற்பாடுகளை பலப்படுத்திக்கொண்டு எமக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏனைய கட்சிகளின் ஒத்துழைப்புகளை பெற்றுக்கொண்டு எமது அணியை மேலும் பலப்படுத்தவே நினைக்கின்றோம் என்றார்.

தமிழ், முஸ்லிம் கட்சிகளின் உறுப்பினர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும், தமிழ் சிங்கள புத்தாண்டின் பின்னர் தமிழ், முஸ்லிம் கட்சிகளின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து பரந்த அளவிலான வேலைத்திட்டமொன்றை கையாளவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# இடைக்கால அரசாங்கம் சாத்தியமற்றது

நேற்று முன்தினம் (11) பதவியேற்றார்.

எவ்வாறாயினும், சாந்த பண்டார இராஜாங்க அமைச்சராக பதவிப்பிரமாணம் செய்தமை, கட்சி கொள்கையை காட்டிக் கொடுக்கும் செயலென ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட உப தவிசாளர் ரோஹண லக்ஷ்மன் பியதாஸ தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கட்சியின் கொள்கைக்கு எதிராக செயற்பட்ட சாந்த பண்டாரவை கட்சியின் அனைத்து பதவிகளிலிருந்தும் நீக்குவதற்கும் அவருக்கெதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தேசிய அமைப்பாளர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

# பழைய பங்காளிகள் பகிஷ்கரித்தனர்

இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது தொடர்பாக ஜனாதிபதியுடன் நடைபெறவிருந்த இரண்டாவது சுற்று கலந்துரையாடலை புறக்கணிக்கவே அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

தமது அணியில் இருந்த ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரான சாந்த பண்டாரவை, அரசாங்கத்தின் பக்கம் இழுத்து அவருக்கு இராஜாங்க அமைச்சுப் பதவியை வழங்க நடவடிக்கை எடுத்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே ஜனாதிபதியுடனான சந்திப்பை பகிஷ்கரிக்க அவர்கள் முடிவெடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

புதிய பிரதமர் தலைமையில் இடைக்கால அரசாங்கத்தை அமைத்து தற்போதைய பிரச்சினைக்கு தீர்வுகாணப்பட வேண்டும் என சுயாதீன உறுப்பினர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்ற நிலையில், இதுகுறித்து கடந்த ஞாயிற்றுக்கிழமையும் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன்போது புதிய பிரதமரை நியமிக்கும் கோரிக்கைக்கு ஜனாதிபதி இணங்கியிருக்கவில்லை.

இந்நிலையில் நேற்றைய தினம் மீண்டும் ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் இதே அரசாங்கத்தில் புதிய பதவி நியமனங்கள் மற்றும் பிரதமரின் செயற்பாடுகள் என்பவற்றை காரணம் காட்டி ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சி உள்ளிட்ட சுயாதீனமாக இயங்கும் அனைத்து கட்சிகளின் பிரதிநிதிகளும் அதில் கலந்துகொள்ளாதிருப்பதற்கு முடிவெடுத்துள்ளனர்.

# என்னை வீட்டுக்கு....

எவ்வாறாயினும், ஜனாதிபதி வசமிருந்த அமைச்சுப் பொறுப்புக்களை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் ஒப்படைப்பார்கள். இவ்வாறு செய்வதால் எந்தவிதப் பிரயோசனமும் இல்லை என்றார்.

நாட்டிலுள்ள அந்நிய செலாவணி கையிருப்பைப் பார்க்கும்போது இந்த வாரத்துக்குப் பின்னர் அரசாங்கத்தால் தொடர்ந்து செயற்பட முடியும் என நான் நினைக்கவில்லை. நாட்டின் பிரதான இறக்குமதி நிறுவனங்களிடம் கடனைப் பெற்றே எரிபொருளுக்கு தற்போது பணம் செலுத்தப்பட்டு வருகிறது. இவ்வாறு தொடர்ந்து பிச்சை எடுத்துக்கொண்டிருக்க முடியாது என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் மே மாதத்துக்குப் பின்னர் இந்திய கடன் உதவித் தொகை நிறைவடையும். இதன் பின்னார் நாடு பாரிய நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்க நேரிடும். அதுபோல அடுத்த பெரும்போகத்துக்கு உரத்தை இறக்குமதி செய்ய முடியாது. இதனால் நாட்டில் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

இவ்வாறு செல்லும் பட்சத்தில் ஜூன் மாதத்துக்குப் பின்னர் தனியார் துறைகளை மூட வேண்டிய நிலையே ஏற்படும். நாட்டு இளைஞர்கள் கோட்டா கோ ஹோம் என்கிறார்கள். ஆனால் ஜனாதிபதி இதுவரையில் வீட்டுக்கு செல்லவில்லை. ஆனால் என்னை வீட்டுக்கு அனுப்பிவிட்டார்கள் என்றார்.

# சவால்களை வெற்றிகொள்ளும் ஆண்டாக அமையட்டும்



தற்போது நிலவுகின்ற பொருளாதார மற்றும் உலகளாவிய நெருக்கடியான நிலையில், வரலாற்றில் மிகப் பெரிய சவாலை இலங்கையர்களாகிய நாம் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. ஒற்றுமையுடனும், சரியான புரிந்துணர்வுடனும் நாம் அதனை வெற்றிகொள்ள வேண்டும். சவால்களுக்கு முகங்கொடுப்பதில் நீங்கள் எதிர்கொள்ளும் சிரமங்கள் ஏராளம். எமது அரசாங்கத்தின் மூலம் தற்போதைய நெருக்கடியான நிலையில் இருந்து மக்களின் இயல்பு வாழ்வை பாதுகாக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் சிங்கள, தமிழ் புத்தாண்டுப் பிறப்பை புதிய எதிர்பார்ப்புகளுடன் வரவேற்பது பழங்காலத்திலிருந்தே இடம்பெறும் நமது பாரம்பரியம் ஆகும். இந்த ஆண்டும் அந்த எதிர்பார்ப்புகளுடனும், புதிய நம்பிக்கைகளுடனும் புத்தாண்டுப் பிறப்பைக் கொண்டாடுகிறோம்.

புத்தாண்டின் உண்மையான உரிமை நமது குழந்தைகளுக்கே உண்டு. குழந்தைகளுக்கு புத்தாண்டு தினத்தின் மகிழ்ச்சியைப் பாதுகாத்துக் கொடுப்பதில் நீங்கள் அதிக அக்கறை செலுத்துகிறீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

அதேபோன்று, புத்தாண்டு கொண்டாட்டங்களை அனுபவிப்பதற்காக தமது பிள்ளைகளுடன் இணைவதற்கான வாய்ப்பை இழந்த, விசேட கடமைகளில் ஈடுபட்டு இருப்பவர்களைப் போன்று, வெளிநாடுகளில் இருக்கும் அனைவரினதும் அர்ப்பணிப்பை நினைவுகூருகிறேன்.

மலர்ந்துள்ள சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு, நிலவுகின்ற சவால்களை வெற்றிகொள்ளும் சுபீட்சம் நிறைந்த இனிய புத்தாண்டாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

# மகிழ்ச்சி நிறைந்த ஆண்டாக அமையட்டும்



இலங்கையர்களின் தொன்மைமிகு பாரம்பரியமான தமிழ், சிங்கள புத்தாண்டு பிறப்பினை முன்னிட்டு வாழ்த்துகளை பகிர்ந்துக் கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

துன்பத்தை வென்று மகிழ்ச்சியை அடையும் எதிர்பார்ப்பை குறிக்கும் தமிழ், சிங்கள புத்தாண்டானது நம் அனைவரதும் மாபெரும் கலாசார பெருவிழாவாகும்.

விவசாயத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாற்று சமூகம், கலாசார மதிப்புகளை ஒரு தலைமுறையிலிருந்து மற்றுமொரு தலைமுறைக்கு கடத்தும் புத்தாண்டு கொண்டாட்டங்கள் தமிழ், சிங்கள ஆதிக்குடிகளின் தொன்மை வாய்ந்த மரபுகளை நினைவுபடுத்துகிறன.

புதிதாகப் பிறக்கும் புத்தாண்டில் நம் நல்லெண்ணங்களை அடைவதை நோக்கமாகக் கொள்வதே அனைவரது எதிர்பார்ப்பாகும்.

நாட்டில் நிலவும் இக்கட்டான சூழ்நிலையை கடந்து செல்வதற்கு நாம் அனைவரும் ஒரு தேசமாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இச்சவால் மிகுந்த காலகட்டத்தில் எதிர்பாராத விதமாக நாம் அனைவரும் முகங்கொடுத்த, கொடுத்துவரும் துன்பங்களை ஒவ்வொன்றாக இல்லாதொழிப்பதற்கு தேவையான எதிர்கால திட்டங்களை அரசாங்கம் ஏற்கெனவே செயற்படுத்தி வருகின்றது.

உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் ஒட்டுமொத்த நாட்டு மக்களுக்கும் இப்புத்தாண்டு அமைதியும் மகிழ்ச்சியும் நிறைந்த சிறப்பான ஆண்டாக அமைய, பிரார்த்தித்து வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

# செழிப்புகள் மேலோங்க வாழ்த்துகள்



யுகத்தில் மாபெரும் கலாசார நிகழ்வாக கருதப்படும் சிங்கள, தமிழ் புத்தாண்டு அனைத்து இலங்கை பிரஜைகளுக்கும் சுபீட்சமான புத்தாண்டாக அமையவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களைப் போன்று, தமிழ் மக்களின் பாரம்பரிய சூரிய நாட்காட்டியின் முதல் நாள் உதயமாகுவது ஏப்ரல் மாதத்திலாகும். இரு வேறு மதங்களை உருவாக்கிக் கொண்ட இரு இனத்தவர்கள் ஒன்றோடு ஒன்றாக கொண்டாடும் அபூர்வமான கொண்டாட்டமாக சிங்கள, தமிழ் புத்தாண்டை அடையாளப்படுத்த முடியும்.

இந்நாட்டு மக்கள் சித்திரை மாதத்தை சுபீட்சமான மாதமாக கருதுகின்றனர். இதனை அடிப்படையாகக் கொண்டு இலங்கை மக்கள் நீண்டகாலமாக வெகு விமர்சையாக சிங்கள, தமிழ் புத்தாண்டை கொண்டாடிக் கொண்டிருக்கின்றனர்.

செழிப்பு நிறைந்த பாடத்தை கற்றுத்தரும் சிறப்பான புத்தாண்டு, இம்முறை, எங்கள் குடிமக்களை சுத்தமான உணவை சமைக்கும் தயக்கத்திற்குள் தள்ளிவிட்டே பிறந்துள்ளது.

பொருளாதார மற்றும் அரசியல் ரீதியில் மிக ஆபத்தான நிலைக்கு முழு நாடு தள்ளப்பட்டுள்ள நிலையில், எங்களுடைய மக்களின் சாதாரண வாழ்க்கைத்தரம் சவாலுக்குள்ளாகியுள்ளது.

இந்த நெருக்கடியான சூழல் முடிவுற்று, வளமான அமைதியான, செழிப்பு நிறைந்த நாளைய நாள் பிறந்து, கனவுகள் நனவாக பிரார்த்திக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

# 'மனிதநேய ஒன்றிணைவு'

**டயலொக், MAS, Hemas மற்றும் சர்வோதய ஆகியன ஒன்றிணைந்து அவசரத் தேவையுடையோருக்கு உதவுவதற்காக 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தை அறிமுகப்படுத்துகின்றன.**




படத்தில் இடமிருந்து வலம்: PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் மற்றும் MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ.




படத்தில் இடமிருந்து வலம்: சுயாதீன தொலைக்காட்சி வலையமைப்பு பிரதி பொது முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ரவி சிறிவர்தன, Voice of Asia Network இன் தலைமை நிர்வாக அதிகாரி அஜாஸ் ஷபீக், PwC ஸ்ரீலங்காவின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுஜீவ முதலிகே, சர்வோதய சிரமதான சங்கத்தின் தலைவர் கலாநிதி வின்யா ஆரியரத்ன, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, Hemas Holdings PLC இன் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன், MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ, EAP வலையமைப்பு பிரைவட் லிமிட்டட் நிறுவனத்தின் அலைவரிசை பிரிவு தலைவர் ரங்கன டி சில்வா, பவர் ஹவுஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின் சந்தைப்படுத்தல் குழும பணிப்பாளர் துஷார பெரேரா.

100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்கப்படுகின்றன

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியின் காரணமாக அதிகமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்கள் மற்றும் சமூகங்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில், டயலொக் ஆசிஆட்டா, MAS Holdings Pvt Ltd, Hemas Holdings PLC, சர்வோதய சிரமதான சங்கம் மற்றும் PwC Sri Lanka ஆகியன இணைந்து 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டமொன்றை கூட்டாக ஆரம்பித்துள்ளன .

பாதிப்பிற்குள்ளாகியுள்ள சமூகங்களுக்கு உடனடி உதவிகளை வழங்கும் நோக்கில் தொலைநோக்குப் பார்வையுடன், 'மனிதநேய ஒன்றிணைவு' நிவாரண திட்டத்தை முன்னெடுப்பதற்காக சர்வோதயா உள்ளிட்ட ஒத்த எண்ணம் கொண்டமேற்படி பெருநிறுவன கூட்டணியுடன் டயலொக் கைகோர்த்துள்ளது, இதற்கமைய, இந்த பெருநிறுவன கூட்டு நிறுவனங்கள் நாட்டில் 100,000 க்கும் மேற்பட்ட பாதிக்கப்பட்டுள்ள மற்றும் வறுமையில் உள்ள குடும்பங்களை அடையாளம் கண்டு அவசரகால நிவாரணங்களை வழங்கவுள்ளன. குறித்த பெருநிறுவன கூட்டாளர்களின் இணக்கத் தேவைகளின்படி நிதி நிர்வாகத்தையும் அறிக்கையிடலையும் கண்காணிக்கும் முயற்சியை PwC மேற்கொண்டுள்ளது. மேலும், ITN, Siyatha Swarnawahini, TV Derana மற்றும் வசந்தம் ஆகியன ஊடக பங்காளிகளாக இந்த முயற்சியில் இணைந்துள்ளன. மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' நிகழ்வானது 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி செயற்படத் தொடங்கும், அதற்கமைய அனைத்து 25 மாவட்டங்களிலும் அவசர நிவாரணம் தேவைப்படும் இடங்களில், குடும்பங்களுக்கு இதனூடாக அத்தியாவசிய உலர் உணவுப் பொதிகள் விநியோகிக்கப்படும்.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ அவர்கள் இது குறித்து கருத்து தெரிவிக்கையில், "100,000 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கும் இந்த முயற்சியில் எம்முடன் இணைந்து செயற்படுகின்ற MAS, Hemas நமது செயற்றிட்ட செயற்பாட்டு பங்காளியான சர்வோதய மற்றும் பொறுப்புக்கூறல் பங்குதாரரான PwC ஆகியோருக்கு நாம் நன்றி கூறுகின்றோம். நாடு முழுவதும் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களின் நம்பகமான டிஜிட்டல் பங்காளியாக உள்ள டயலொக் நிறுவனமாகிய நாம் நாட்டில் நிலவுகின்ற சூழ்நிலையினால் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்கள் அத்தாக்கங்களிலிருந்து விடுபடுவதற்கு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்துள்ளோம். விளிம்பு நிலை சமூகங்களுக்கு அவர்களின் மிகப்பெரிய தேவைகளின் போது அவர்களுக்கு உதவ இதுபோன்ற நிவாரண முயற்சிகளை நாங்கள் எப்போதும் முன்னெடுத்து வருகின்றோம். எதிரில் உள்ள சவாலின் அளவைக் கருத்தில் கொண்டு, இந்த முயற்சியில் எங்களுடன் இணைந்து கொள்ளுமாறு இலங்கை பெருநிறுவனங்களுக்கு நாம் அழைப்பு விடுக்கின்றோம்" என்றார்.

மேற்படி நிவாரண திட்டம் குறித்த அறிமுக விழாவில் உரையாற்றிய MAS Holdings குழுமத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சுரேன் பெர்னாண்டோ அவர்கள், "MAS என்பது அதன் சமூக மனசாட்சிக்கு பெயர் பெற்ற ஒரு அமைப்பாகும், மேலும் இதுபோன்ற சந்தர்ப்பங்களில் MAS நிறுவனமும் முக்கிய பங்காளராக செயற்பட கிடைத்துள்ளதை பெரும் பாக்கியமாக நாம் கருதுகின்றோம். நமது வீடு என்று நாம் அழைக்கின்ற தாய் நாட்டிற்கு சர்வோதயவுடன் இணைந்து பலமுறை பணிபுரிந்துள்ளதால், இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களில் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய வல்லமையும் திறனும் எவருக்கேனும் இருக்குமாயின், அது நிச்சயமாக சர்வோதயதான் என்பதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம். சர்வோதய நிறுவனமானது அதன் நோக்கம் மற்றும் அவர்களின் நாடளாவிய வளங்களின் வலையமைப்புடன் சிறந்த செயற்பாட்டு பங்காளியாக இருந்து வருகின்றது. எனவே, இலங்கையில் உள்ள ஏனைய பெருநிறுவனங்களும் இவ்வாறே எம்முடன் இணைந்து செயற்பட வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து, இந்த வேலைத்திட்டத்தினூடாக நம்முடன் ஒன்றிணைந்து இக்கட்டான சூழ்நிலையில் இந்நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து அவர்களை மீளச்செய்வதற்கான உதவிகளை வழங்குவதற்கான வழிகளைக் கண்டறிய உத்வேகம் பெறுவார்கள் என்று நான் உண்மையிலேயே நம்புகிறேன். இது நமது தேசம், நமது மக்கள் மற்றும் நமது கூட்டுப் பொறுப்பு" என்றார்

Hemas Holdings பிஎல்சியின் குழும பிரதம நிறைவேற்று அதிகாரி கஸ்தூரி செல்லராஜா வில்சன் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், "இலங்கை நிறுவனம் என்ற வகையில் நாடு முழுவதிலுமுள்ள எமது மக்களின் உடனடித் தேவைகளை நிவர்த்தி செய்வதை உறுதிப்படுத்துவது எமது கடமையாகும். ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்குதல், சமத்துவமின்மையை அகற்றுவதில் கவனம் செலுத்துதல் போன்ற நமது நோக்கங்களுடன் மேற்படி நிவாரண திட்டமும் ஒத்துப் போகின்றது. எனவே, அடுத்து வரும் மாதங்களில், நாம் நமது பங்காளிகளுடன் தொடர்ந்து பணியாற்றுவதுடன் நமது சமூகங்கள் மற்றும் சேவையாளர்களின் சுமையை குறைக்கும் பங்களிப்பினை தொடர்ந்தும் வழங்குவோம்" என்றார்.

சர்வோதய சிரமதான சங்கத்தின், "குடும்பங்களுக்கு அவசர நிவாரணம் வழங்குவதற்காக இந்த மனிதாபிமான முயற்சியை முன்னெடுக்கும் நோக்கில் டயலொக், MAS மற்றும் Hemas போன்ற உயர்தர நிறுவனங்களுடன் கைகோர்ப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். எண்ணிக்கைகளின் அடிப்படையிலான அறிவியல் அளவுகோல்கள், சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் தற்போதைய பொருளாதார நெருக்கடியால் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ள பயனாளிகளை நாங்கள் அடையாளம் காண்போம், மேலும் இந்த நிவாரண திட்டத்தில் 25 மாவட்டங்களையும் உள்ளடக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். உணவுப் பாதுகாப்பின்மை ஆபத்தான விகிதத்தில் அதிகரித்து வருவதால், இந்த குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கும் அப்பால் வீட்டுத்தோட்டம் அமைத்தல் போன்ற நிலையான தீர்வுகளை வழங்குவதிலும் ஒரு படி தாண்டிச்செல்ல நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஏனைய பெரு நிறுவன நிறுவனங்களையும் இந்த முயற்சியில் நம்முடன் ஒன்றுசேர வருமாறு நான் அழைக்கின்றேன், இதன்மூலம் கூட்டாக, நாட்டில் உள்ள நமது சொந்த சகோதர சகோதரிகளை நாம் பராமரித்துக்கொள்ள முடியும்" என்றார்.

பயனுள்ள பொருளாதார முன்மாதிரி திட்டத்தினூடாக நிலையான நலன் பரிமாற்ற முறையொன்று நாட்டில் நிறுவப்படும்வரை மேற்படி 'மனிதநேய ஒன்றிணைவு' வேலைத்திட்டமானது 60-90 நாட்களுக்கு தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

# "தம்பியைக் காப்பாற்றும் தமையனது இறுதி முயற்சி"



கே.எல்.ரி.யுதாஜித்

தம்பியைக் காப்பாற்ற முனையும் தமையனது, இறுதி முயற்சியே நேற்றைய பிரதமரின் உரை. உலக வரலாற்றில் நடந்த புரட்சிகள், சர்வாதிகார ஆட்சி மாற்றங்கள் அனைத்துக்குமான காரணிகள் நம்நாட்டில் நிரம்பியுள்ளன. என்ன செய்வது என நீங்கள் தீர்மானியுங்கள்? என்று தெரிவித்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளர் நாயகமுமான கோ.கருணாகரம் (ஜனா) இல்லையெனில் மக்கள் தீர்மானம் உங்களால் ஜீரணிக்க முடியாதது ஆகலாம் என்றார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரை தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் தலைமையானது, மக்கள் முன்னிலையில், இன்னொரு தடவை உரையாற்ற முடியாத நிலையில் அரசாங்கப் பதவியணியில் தன் தம்பியைக் காப்பாற்ற பிரதமர் உரையாற்றியுள்ளார்.

அரசாங்கம் எனும் வகையில், இரண்டரை வருடங்களாக மேதகு உரையாற்றுவார். இடையிடையே, பிரதமர் தன் தம்பிக்கு முட்டுக்கொடுப்பார். பேசும் போதெல்லாம் சிங்களப் பௌத்தப் பேரினவாதம் சிறகடித்துப் பறக்கும். அவர்கள் உடல் மொழிகளோ வித்தியாசமாக இருக்கும். நேற்றைய பிரதமர் உரையில், சிங்களமும் இல்லை. பௌத்தமும் இல்லை. அவர்களது வழமையான கம்பீர உடல் மொழியும் இல்லை. வார்த்தைகளில் கூட சரத்து இல்லை. இன்னமும் கூட, தமிழ் மக்கள் தம் உரிமைகளுக்காக போராடிய 70 வருட வரலாறுகள் தம்மை தக்க வைக்கத் தேவைப்படுகிறது. யுத்தம் முடிந்து இத்தனை வருடங்கள் ஆகிவிட்டன. யுத்தத்தின் காரணங்கள் மாறிமாறி வந்த அரசாங்கங்களால் உணரப்படவில்லை. ராஜபக்ஷ குடும்பம்தான், ஒட்டு மொத்த நாட்டின் சீரழிவுக்குக் காரணம் என்று நாம் கூறவில்லை. அரசாங்கத்தின் 11 பங்காளிக் கட்சிகளே கூறுகின்றன; மொட்டுக் கட்சியின் பின்வரிசை உறுப்பினர்கள் கூறுகின்றனர்; அமைச்சர்கள் பலர் கூறுகின்றனர். எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. ஆனால், நீங்கள் இன்னமும் புலியை ஒழித்த சிங்கங்கள் நாம் என்று புலம்புகிறீர்கள் என்றார்.

## மண்ணெண்ணெய் தட்டுப்பாடு:
# மீனவர்கள் கடும் பாதிப்பு

ஹஸ்பர்



நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டு நிலைமை காரணமாக, தாங்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள், கவலை தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை, கரையோர மீனவர்கள் மண்ணெண்ணெய் மூலமாக தங்களது இயந்திர படகை பயன்படுத்தி வருகின்றனர். மண்ணெண்ணெய் தட்டுப்பாட்டால் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

மண்ணெண்ணெயை பெற நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டும். சில வேளை வெறுங்கையுடன் வீடு திரும்ப வேண்டியுள்ளதுடன் அவ்வாறான நாள்களில் கடலுக்குச் செல்ல முடியாது. இதனால், தொழில் பாதிக்கப்படுகிறது எனவும் தெரிவிக்கின்றனர்.

இரவு நேரங்களில் கண்விழித்து கடற்றொழிலில் ஈடுபட்டு மீண்டும் கடலுக்கு செல்வதாக இருந்தால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் காத்திருந்து, பல மணி நேரகாலத்தைக் கடத்த வேண்டியுள்ளது என்றும் தெரிவித்தனர்.

இயந்திரப் படகு மூலமாக மீன்படியில் ஈடுபடுவோருக்கு மண்ணெண்ணெயை இலகுவாகப் பெறுவதற்கு உரிய அதிகாரிகள் வழி செய்து தருமாறும் மீனவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பெருநாள்களின் வியாபாரம் களைகட்டவில்லை

ஏ.எச்.ஏ. ஹுஸைன்



இம்முறை தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டு வியாபார சந்தையும் றமழான் பண்டிகை வியாபாரமும் களைகட்டவில்லை என்பதால் நகர வர்த்தகர்கள் சலிப்பில் உள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் பொருட்களுக்கு ஏற்பட்டுள்ள அதிகரித்த விலையேற்றம், பொருட்களின் பற்றாக்குறை, எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காக மக்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை மின்வெட்டு என்பனவற்றால் மக்கள் பண்டிகைகளில் நாட்டங்கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக, மக்கள் தமிழ், சிங்கள சித்திரைப் புத்தாண்டுக்காகவும் றமழான் பண்டிகைக்காகவும் உடுதுணிகளையும் இன்னபிற பொருட்களையும் கொள்வனவு செய்யவில்லை என்று வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ், சிங்களப் புத்தாண்டுக்காகவும் றமழான் பண்டிகைக்காகவும் களை கட்டியிருக்க வேண்டிய பஸார் பகுதி, வெறிச்சோடிக் காணப்படுவதாக வர்த்தகர்கள் மேலும் கூறுகின்றனர்.

ஒட்டு மாத்தத்தில் நாட்டின் ஸ்திரமற்ற நிலைமை, அடிமட்ட அன்றாடம் காய்ச்சிகளான கூலித்தொழிலாளர்கள் தொடக்கம் அனைத்து வகுப்பினரையும் மிக மோசமாகப் பாதித்துள்ளது என பாதிக்கப்பட்டுள்ளோர் ஆதங்கம் வெளியிடுகின்றனர்.

# "செயலணிகளை கலைத்துவிடவும்"

நூருள் ஹுதா உமர்.



நாடு எதிர் நோக்கும் பாரிய பொருளாதார நெருக்கடியில் 'ஒரே நாடு -ஒரே செயலணி', தொல்பொருள் செயலணி போன்றவை அவசியமற்ற செயலணிகளாகும் எனத் தெரிவித்த ஐக்கிய காங்கிரஸ் கட்சி (உலமா கட்சி) தலைவர் முபாறக் அப்துல் மஜீத், அந்த செயலணிகளை கலைத்துவிட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

நாட்டில் தேவையற்ற பிரச்சினைகளை உருவாக்கிய ஞானசார தேரரை, 'ஒரே நாடு- ஒரே சட்டம்' செயலணி அமைத்ததன் மூலம், அவரை வேறு சூழலுக்குள் தள்ளி, அவரது வாய் மூடப்பட்டது என்பது உண்மை. அச்செயலணி ஜனாதிபதி செயலகத்தில் மட்டும் இருந்து கொண்டு அறிக்கை தயாரிப்பர் என்றே நாம் நினைத்தோம்.

ஆனால், பின்னர் அச்செயலணியை வைத்துக்கொண்டு அவரும் அதன் உறுப்பினர்களும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்ததன் மூலம் அரச நிதி துஷ்பிரயோகம் செய்யப்பட்டது மட்டுமின்றி இனங்களுக்கிடையில் சந்தேகங்களையும் உருவாக்கியது.

நாட்டின் குற்றவியல் சட்டம், சிவில் சட்டம் எனப் பெரும்பாலான சட்டங்கள் அனைவருக்கும் பொதுவாகவே உள்ளன. திருமண சட்டம் மட்டுமே ஒவ்வொர் இனத்துக்கும் ஏற்ற வகையில் உள்ளன. இச்சட்டத்தால் இன்னோர் இனம் பாதிக்கப்படுவதில்லை. இப்போது ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஞானசார தேரரின் எண்ணம் தோற்றுப்போனதாலும், இச்செயலணி அநாவசிய செலவுகளை ஏற்படுத்தியிருப்பதாலும் அச்செயலணியை கலைப்பதே நாட்டுக்கு நல்லது என்ற ஆலோசனையை எமது கட்சி முன் வைக்கிறது.

அதே போல் தொல் பொருள் செயலணியும் பிரயோசனமற்றது என்பதுடன் வீண் செலவுகளை ஏற்படுத்துவதுடன் இனங்களுக்கிடையில் மோதலை உண்டாக்குவதுமாக உள்ளதால் இதுவும் கலைக்கப்படுவதே நாட்டின் எதிர்காலத்துக்கு சிறந்ததாகும் என்று தெரிவித்துள்ளார்.

# சினேகிதர்களுக்கு மட்டும் எரிபொருட்கள் விநியோகம்

எச்.எம்.எம்.பர்ஸான்

நாட்டில் எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில் அதனை பெற்றுக்கொள்ள பொதுமக்கள் நீண்ட வரிசையில், நாள் கணக்காகக் காத்து நிற்பதை காண முடிகிறது.

அந்தவகையில், வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் "எரிபொருள் இல்லை" என்று எழுதப்பட்ட பதாகைகள் காட்சிப் படுத்தப்பட்டுள்ளன. எனினும், எரிபொருள் நிரப்பு நிலையங்களிலுள்ள நபர்களின் சினேகிதர்களுக்கு மாத்திரம் எரிபொருள்களை விநியோகம் செய்யப்படுகின்றது. இந்த செயற்பாடு பொதுமக்கள் மத்தியில் ஆத்திரத்தை எற்படுத்தியுள்ளது.

இவ்வாறு அநீதியான முறையில் எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் நடந்து கொள்வதால் அன்றாடம் தொழில் செய்வோர் பாதிக்கப்படுகின்றனர். அத்துடன், இவ்வாறான சம்பவங்கள் பொதுமக்கள் மத்தியில் முறுகல் நிலையை தோற்றுவிக்கும் செயலாகவும் அமைந்து வருகிறது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த விடயம் சம்பந்தமாக கவனமெடுத்து பாகுபாடின்றி அனைவருக்கும் எரிபொருள்கள் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

# மகனைத் தேடிய தந்தை மரணம்

சண்முகம் தவசீலன்



இறுதி யுத்தத்தின்போது காணாமல் போன தனது மகனை 12 ஆண்டுகளுக்கு மேலாகத் தேடிவந்த மற்றுமொரு தந்தை முல்லைத்தீவு மாவட்டத்தில் உயிரிழந்துள்ளார். முள்ளியவளை, பூதன் வயல் கிராமத்தினை சேர்ந்த முனியாண்டி கருப்பையா என்பவர், யுத்தகாலத்தில் காணாமல் போன தனது மகன், மோகனதாஸை தேடிவந்தார். இந்நிலையிலே அவர், நேற்றுமுன்தினம் (11) மரணமடைந்தார்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் காணாமல் போன தமது பிள்ளைகளை தேடி அலையும் பெற்றோர்கள் பலர் தமது பிள்ளைகளைத் தேடித்தேடியே சுகவீனம் அடைந்து, உயிரிழந்து வருகின்றனர்.

# ஓட்டோ தீக்கிரை

நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம், நவாலி ஆனந்தா வீதி பகுதியிலுள்ள வீடொன்றினுள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஓட்டோ, வன்முறை கும்பலால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

இரண்டு மோட்டார் சைக்கிள்களில் நேற்றுமுன்தினம் (11) வந்த 06 பேர் கொண்ட வன்முறை கும்பலே, ஓட்டோவை அடித்து நொறுக்கி, தீ வைத்துவிட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# வவுனியாவில் நீண்ட வரிசை

க. அகரன்

வவுனியா நகரில், எரிபொருள் விநியோகிக்கும் இரு பிரதான விநியோக நிலையங்களுக்கு முன்பாக, நேற்று (12) அதிகாலையில் இருந்து நீண்ட வரிசையில் மக்கள் காத்திருக்கின்றனர்.

குறிப்பிட்ட அளவான எரிபொருளே, குறித்த விநியோக நிலையங்களுக்கு கிடைத்துள்ளது. இதனால், பலர் எரிபொருள் மற்றும் சமையல் எரிவாயு, பெற்றுக்கொள்ள முடியாமல், வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல வேண்டியும் ஏற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வயோதிபர்கள், இளைஞர்கள் அரச உத்தியோகத்தர்கள் எனப் பலரும் காலையில் இருந்தே வரிசையில் காத்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.



# வெள்ளி வரை மழை

எம்.றொசாந்த்

வட மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (15) வரையில், பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது என யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மன்னார் வளைகுடா பகுதியில் நிலவும் காற்று சுழற்சி காரணமாக வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை (15) வரையில் பரவலாக மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக, யாழ்ப்பாண மாவட்டம் மற்றும் மன்னார் தீவு உட்பட்ட மேற்கு கரையோரப் பகுதிகள் ஏனைய பகுதிகளை விடச் சற்று கூடுதலான அளவு மழையைப் பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், இதனைக் கருத்தில் கொண்டு செயற்படுவது நன்மை பயக்கும் என மேலும் தெரிவித்தார்.

# திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் தீ வைத்து எரிப்பு

செந்தூரன் பிரதீபன்



ஆவரங்கால் மேற்கு பகுதியில் உள்ள தோட்ட வெளியில் எரியூட்டப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதாக அச்சுவேலி பொலிஸார் தெரிவித்தனர். குறித்த மோட்டார் சைக்கிள், அதே பகுதியைச் சேர்ந்த ஒருவருடையது என தெரியவருகின்றது.

மோட்டார் சைக்கிள், திங்கட்கிழமை இரவு திருடப்பட்டு, அருகிலுள்ள தோட்ட வெளிக்குகொண்டு செல்லப்பட்டு எரியூட்டப்பட்டு உள்ளதாக விசாரணைகளில் இருந்து அறியமுடிகின்றது என பொலிஸார் தெரிவித்தனர். திருட்டு போன மோட்டார் சைக்கிள் உரிமையாளரின் வீட்டில் இதற்கு முன்னர் எரிவாயு சிலிண்டர் ஒன்றும் திருடப்பட்டு இருந்தமை தெரிய வந்துள்ளது. சம்பவம் தொடர்பில் விரிவான விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விபத்தில் காணாமல் போன சிப்பாய் சடலமாக மீட்பு

எம்.றொசாந்த்

சந்தேகத்துக்கு இடமான படகுகளை துரத்திய இலங்கை கடற்படை படகுகள் இரண்டு ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்கு உள்ளானதில், கடற்படை சிப்பாய் ஒருவர் காணாமல் போயிருந்தார். அவர், காரைநகர் கடற்பரப்பிலிருந்து நேற்று (12) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெடுந்தீவுக்கு தொலைவில், இந்தியா பக்கமாக இருந்து, திங்கட்கிழமை (11) வந்த சந்தேகத்துக்கு இடமான இரண்டு படகுகளை கடற்படையினர் மறிக்க முற்பட்ட போது, அப்படகுகள் கடற்படையின் கட்டளையை மீறி தப்பி சென்றுள்ளன.

அதனையடுத்து கடற்படை படகுகள், அவர்களை துரத்திச் சென்றுள்ளன. இதன்போது, கடற்படைக்குச் சொந்தமான இரண்டு படகுகள் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளன.

அதன்போது படகில் இருந்த கடற்படையினர் நால்வர், கடலில் தவறி விழுந்துள்ளனர். அதில், மூவர் ஏனைய கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளனர். ஒருவர் காணாமல் போயிருந்தார்.

காணாமல் போனவரை தேடும் பணியில் கடற்படையினர் ஈடுபட்டு வந்தனர். இந்நிலையில் காரைநகர் கடற்பரப்பிலிருந்து அவர், சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அதேவேளை மீட்கப்பட்ட மூன்று கடற்படையினரில் இருவர் காயங்களுக்கு உள்ளான நிலையில், ஊர்காவற்றுறை வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.



## அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால்

# மரக்கறி உற்பத்தியாளர்கள் பாதிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் மரக்கறிகளை விற்பனை செய்து கொள்ள முடியாமல், விவசாயிகளும் மரக்கறி வியாபாரிகளும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் எனத் தெரிவித்த மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஆர். இராஜாராம், அரசாங்கத்தின் அசமந்தப் போக்கால் எமது நாட்டு மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது தொடர்பாக தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர், கடந்த காலத்தில் நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்தில் வியாபாரி ஒருவர், நாளொன்றுக்கு 3,000 கிலோ கிராம் முதல் 5,000 கிலோ கிராம் மரக்கறி மற்றும் உருளைக்கிழங்கு என்பவற்றை விற்பனை செய்து வந்த நிலையில், இன்று 200 கிலோ கிராம் மரக்கறிகளைக் கூட விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

டீசல் தட்டுப்பாட்டால் வெளி மாவட்டத்திலுள்ள வியாபாரிகள் மரக்கறிகளை கொள்வனவு செய்வதற்கு நுவரெலியா விசேட பொருளாதார மத்திய நிலையத்துக்கு வருவது மிகவும் குறைந்துள்ளது.

இதனால் மரக்கறி விலையிலும் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதேவேளை, மரக்கறி உற்பத்தியில் ஈடுபடும் விவசாயிகளும் உற்பத்தி செய்யும் மரக்கறிகளை விற்பனை செய்ய முடியாமல் அவஸ்தைப்படுகின்றனர். அத்தோடு மரக்கறி தோட்டங்களிலும் மரக்கறி வியாபாரிகளிடம் தொழில்புரியும் தொழிலாளர்களும் தொழில் இல்லாமல் கஸ்டப்படுகின்றனர். கடந்த காலத்தில் 1,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட இரசாயன உரம் ஒரு மூடை, தற்பொழுது 16,000 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகின்றது. அதேவேளை, யூரியா ஒரு மூடை 25,000 ரூபாய்க்கு விற்கப்படுகின்றது.

சமையல் எரிவாயு தட்டுப்பாடு காரணமாக, பல இடங்களிலுள்ள உணவங்கள், சுற்றுலா விடுதிகள் என்பன தற்காலிகமாக மூடப்பட்டுள்ளன. இதனால் சந்தைக்கு காய்கறிகளை கொள்வனவு செய்வதற்ககு ஹோட்டல்காரர்கள் வருவதில்லை என்றார்.

## பாராளுமன்ற உறுப்பினர்களைக் குறைக்க

# திட்டமிட்டு சதி

### சதாசிவம் தெரிவிப்பு

■ பி.கேதீஸ்

நுவரெலியா மாவட்டத்திலிருந்து வரும் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்களை ஆறு உறுப்பினர்களாக குறைப்பதற்கு தேர்தல் திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என, இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

நுவரெலியா கூட்டுறவு சுற்றுலா விடுதியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இதனை தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,இது நுவரெலியா மாவட்டத்திற்கு இழைக்கப்படும் அநீதி என்பதுடன் திட்டமிட்ட சதியாகும். ஆகவே நுவரெலியா மாவட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகையை குறைப்பதற்கு இடமளிக்க கூடாது என்றார்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில், நுவரெலியா மாவட்டத்திற்கு எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர். அதன்பின்னர் கடந்த வருடம் ஓர் உறுப்பினர் நுவரெலியா மாவட்டத்தில் குறைக்கப்பட்டு பதுளை மாவட்டத்தில் அதிகரிக்கப்பட்டது.

தற்போது இன்னுமோர் உறுப்பினரை நுவரெலியா மாவட்டத்திலிருந்து குறைத்து, காலி மாவட்டத்தில் அதிகரிக்கப் போவதாக தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே, நுவரெலியா மாநகர சபை எல்லைக்குள் இருந்த நுவரெலியா லவர்சிலிப் தோட்டத்தில் ஒரு பகுதியை, நுவரெலியா பிரதேசத்திற்குள் பிரித்து விட்டனர்.

இதனால் நுவரெலியா மாநகர சபைக்கு தமிழ் உறுப்பினர் ஒருவர் தெரிவாகும் நிலை இல்லாமல் போனது. இதுபோன்று, நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறு இரண்டு உறுப்பினர்கள் ஒதுக்கப்பட்டால் எமது தமிழ் பிரதிநிதித்துவம் நுவரெலியா மாவட்டத்தில் குறைவதற்கு வாய்ப்பாக அமைந்துவிடும்.

ஆகையால், தொழில் நிமித்தம் வெளி மாவட்டங்களிலும் வெளிநாடுகளில் தொழில் செய்பவர்களும் தங்களது வாக்கு பதிவுகளை நுவரெலியா மாவட்டத்தில் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றார்.



## சுபீட்சமும் வளமும் ஏற்பட வழிவகுக்க வேண்டும்

பெருந்தோட்ட துறை மக்கள் உள்ளிட்டு ஒட்டு மொத்த தமிழ் மக்கள் வாழ்வியல்களில் முன்னேற்றகரமான மாற்றங்களுடன் கூடிய சுபீட்சமும் வளமும் ஏற்பட, இப்புத்தாண்டு வழிவகுக்க வேண்டுமென்று, பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ. அரவிந்தகுமார் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

'இப்புத்தாண்டு தமிழர்களுக்குரியதாக இருந்த போதிலும், சிங்கள பௌத்த மக்களும் ஆரம்ப காலம் தொட்டிருந்தே இப்புத்தாண்டுப் பண்டிகையை கொண்டாடி வருகின்றனர். அவ்வகையில், தமிழ், சிங்கள மக்கள் அனைவருமே, இப்புத்தாண்டினை அனுஷ்டிக்கின்றனர். ஆகையால், இவ்விரு இன மக்களும் ஐக்கியம், ஒற்றுமை, சமத்துவம் ஆகியவற்றுடன் வளமாக வாழ்ந்து, இந்நாட்டினை கட்டியெழுப்பும் வகையில், செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



## கண்டியிலும் மரக்கறிகளின் விலை அதிகரித்தது

■ மொஹொமட் ஆஸிக்

எரிபொருள் விலையேற்றம் காரணமாக கண்டியிலும் மரக்கறிகளின் விலை பாரியளவு அதிகரித்துள்ளதென கட்டுகஸ்தோட்டை பொருளாதார மத்திய




நிலையத்தின் வர்த்தக சங்கத்தின் தலைவர் டீ.என். சில்வா தெரிவித்தார்.

டீசல் விலையில் அதிகரிப்பு மற்றும் தட்டுப்பாடு காரணமாக, மரக்கறிகளைக் கொண்டு செல்வதில் ஏற்பட்டுள்ள சிரமம் காரணமாக நேற்றிலிருந்து(12) மரக்கறிகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## வளமான வாழ்வு கிடைத்திட வேண்டும்

சித்திரைப்பிறப்பு சகல வகையிலும் வசந்தத்தை உருவாக்கக்கூடியது. இன, மத, மொழி, சாதி, சமய வேறுபாடுகளைக் களைந்து எல்லோரும் ஒருதாய் மக்களென உலகறியச்செய்யும் சிறப்பு நாளாகும்.

இச்சித்திரைப் புத்தாண்டில் மனிதம் நிரந்தரமாய் நிலைத்து புதிய சாதனைகளையும், வெற்றிகளையும் பெற்று, வழிமறிக்கும் தடைகளைத் தகர்த்து, மகிழ்ச்சி பொங்கும் நாளாக அமைய இறைவனை பிராத்திப்பதோடு, இந்நாளில் இலங்கையில் வாழும் அனைத்து இன மக்களுக்கும் சித்திரை புத்தாண்டு நல் வாழ்த்துகளைப் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.





# இரவிலிருந்து வரிசை

■ ரஞ்சித் ராஜபக்ஷ

லிட்ரோ சமையல் எரிவாயு நிறுவனத்தால் நேற்றைய தினம் (12) ஹட்டன் நகரிலுள்ள முகவர் நிலையங்களுக்கு விநியோகிக்கப்பட்ட சமையல் எரிவாயு சிலிண்டர்களைப் பெற்றுக்கொள்வதற்காக, நேற்றுமுன்தினம் (11) இரவிலிருந்தே மக்கள் காத்திருக்கத் தொடங்கியிருந்தனர்.

ஹட்டன் நகரிலுள்ள நான்கு முகவர் நிலையங்களுக்கு லிட்ரோ நிறுவனத்தால் 400 சிலிண்டர்களே விநியோகிக்கப்பட்ட நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் வரிசைகளில் காத்திருந்தனர்.இதற்கமைய இன்று காலை தொடக்கம் ஹட்டன் பொலிஸாரின் தலையீட்டுடன் டோக்கன் விநியோகிக்கப்பட்டு சிலிண்டர்களை விநியோகிக்கும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.





# வைத்திய துறையினர்



சுகாதாரத்துறையினர் தற்போது முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுத்தர கோரி, மாத்தளை பொது வைத்தியசாலையில் நேற்று (12) பகல் எதிர்ப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் குறித்த வைத்தியசாலையின் தாதியர்கள், அலுவலக பணியாளர்கள், வைத்தியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

(மஹேஸ் கீர்த்திரத்ன)



## ஹட்டனில் நான்கு இளைஞர்களின்

# தன்னெழுச்சி போராட்டம்

■ சுதத்.எச்.எம்.ஹேவா

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்துக்கு எதிராக நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், கொழும்பு, காலி முகத்திடலில் நான்கு நாள்களாக இரவு பகல் பாராது தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தவகையில் ஹட்டனில் நேற்று முன்தினம் (11) நான்கு இளைஞர்கள் ஒன்று கூடி, மாலை 5.30 மணியளவில் ஹட்டன் மல்லியப்பு சந்தியில் போராட்டமொன்றை ஆரம்பித்தனர்.

மாலையில் ஆரம்பிக்கப்பட்ட குறித்த தன்னெழுச்சி போராட்டமானது, இரவு 9 மணி வரை நடைபெற்றதுடன், அதன் பின்னர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் நால்வரும் கலைந்து சென்றுள்ளனர்.

## நம்பிக்கை வருகின்ற ஆண்டாக அமையட்டும்

மலர்ந்துள்ள இந்த ஸ்ரீ சுபகிருது வருடம், அனைத்து மக்களுக்கும் செழிப்பானதும் மகிழ்ச்சிகரமானதுமாக அமையட்டும் என இ.தொ.காவின் தலைவர் செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள தமிழ், சிங்கள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஒரு புதிய வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் இத்தருணத்தில், இவ்வருடமானது மக்களுக்கு நம்பிக்கையையும் எதிர்பார்ப்பினையும் கொண்டு வருகிற ஆண்டாக அமைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

கடந்த வருடத்தில், நாம் கற்றுக்கொண்ட சாதக, பாதக விடயங்களை இந்த ஆண்டின் படிப்பினைகளாக கொண்டு எமது வாழ்வினை வளப்படுத்திக்கொள்வதற்கு பயனாக்கிக் கொள்ளும் அதேவேளை மற்றவர்களின் வாழ்விலும் நன்மையை கொண்டுவருமுகமாகவும் பயன்படுத்திக் கொள்வோமாக என தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.



## சமையல் எரிவாயுவை அதிக விலைக்கு

# விற்றவர் சிக்கினார்

■ ரஞ்சித் ராஜபக்ஷ

சமையல் எரிவாயு சிலிண்டரை அதிக விலைக்கு விற்பனை செய்த, விற்பனை முகவர் ஒருவர் கடமைகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளார்.

12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவை அதிக விலைக்கு விற்பனை செய்த டிக்கோயா பகுதியைச் சேர்ந்த முகவர் ஒருவரே பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

குறித்த முகவர் நிலையத்துக்கு 12.5 கிலோ கிராம் நிறையுடைய 80 சிலிண்டர்கள் நிறுவனத்தால் நேற்று முன்தினம்(11) வழங்கப்பட்டிருந்ததுடன், அதனை அவர் 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்துள்ளார்.

12.5 கிலோ கிராம் நிறையுடைய சமையல் எரிவாயுவின் அதிகபட்ச விலையாக லிட்ரோ நிறுவனத்தால் 1,761 ரூபாய் நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், குறித்த முகவர் 3,000 ரூபாய்க்கு விற்பனை செய்ததை அடுத்தே, அவர் தற்காலிகமாக பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, லிட்ரோ நிறுவனத்தின் ஆலோசனைகளை தான் பின்பற்றப் போவதில்லை என்றும் தனது வர்த்தக நிலையத்துக்கு விநியோகிக்கும் சிலிண்டரை தனக்கு தேவையான விலைக்கு விற்கும் உரிமை தனக்கு உள்ளதென டிக்கோயா-தரவளைப் பகுதியிலுள்ள சமையல் எரிவாயு முகவர் ஒருவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# தம்பியை உரையில் காப்பாற்றும் தமையனின் இறுதி முயற்சி

நெருக்கடியான நிலைமையில், அரச தலைவரொருவர், நாட்டு மக்களுக்கு உரையாற்றும் போது, ஒவ்வொருவரும் காதுகொடுப்பர். உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசமும் கூர்ந்து அவதானிக்கும்.

நெருக்கடி, யதார்த்தம், மீண்டெழுதல், தூரநோக்கு, உதவிக்கரம் உள்ளிட்டவை பொதுவான சாராம்சமாக இருக்கும்.

நமது நாட்டைப் பொறுத்தவரையில், கொரோனாவுக்குப் பின்னர், ஒவ்வொன்றுக்கும் வரிசையில் நிற்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமை ஏற்பட்டுள்ளது. தாங்க முடியாத நிலையில், மக்கள் வீதிகளுக்கு இறங்கிவிட்டனர்.

இந்நிலையில்தான், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் (11) உரையாற்றினார்.

'புதிய பிரதமர்', 'இடைக்கால அரசாங்கம்' என்றெல்லாம் கதைகள் அடிபட்டுக்கொண்டிருந்த போது, பிரதமர் மஹிந்தவின் உரை மீதான அவதானிப்பு அதிகரித்திருந்தது.

மஹிந்தவின் உரையை, 'உப்புச் சப்பில்லாத உரை'யென பலரும் விமர்சனம் செய்துள்ளனர். சமூக ஊடகங்களில், கடுமையான விமர்சனங்களுடன் கேலியும் கிண்டல்களும் செய்யப்பட்டன. தொனியைத் தாழ்த்தி, கிளிப்பிள்ளைக்குக் கூறுவதைப் போல கேட்டுக்கொண்டார். எனினும், 90களிலும் அதற்குப் பின்னால் பிறந்தவர்களுக்கும் வரலாறு தெரியாது என்பதையும் நினைவூட்டினார்.

"மக்களின் உயிரைப் பாதுகாத்தது, கண்ணீர் புகைக்கும், துப்பாக்கி தோட்டாக்களுக்கும் மக்களை பலி கொடுப்பதற்கல்ல" -இது குரலைத் தாழ்த்தி சொல்லப்பட்டாலும், அதன் பின்னால் மறைந்திருக்கும் அர்த்தங்களை விளங்கிக்கொள்ள வேண்டும்.

ஆட்சியிலிருந்து விழுந்தவர்களுக்குத் தான், ஆட்சியைப் பிடிப்பது எவ்வளவு கடினமானது என்பது புரியும்.

ஆட்சி கவிழ்ப்புக்கான சூழ்ச்சிகள் ஏதாவது நடக்குமாயின், அரசியல் காய்நகர்த்தல்களை மேற்கொண்டு, தக்கவைத்துக்கொள்வர். அதுதான் அரசியல் இராஜதந்திரம். தேர்தலில் வீட்டுக்குப் போகவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டால், மீண்டும் ஆட்சிப்பீடம் ஏறவேண்டுமென்ற வெறியுடன் தந்திரங்களைச் செய்வர்.

காலி முகத்திடலில் இருக்கும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக, முன்னெடுக்கப்படுவது போராட்டமல்ல; மக்கள் எழுச்சி என்பதை ஆட்சியாளர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். வாழ்வதற்கான உரிமைகளுக்காக குரல் கொடுக்கின்றனர். மக்களோ, எதிரணியினரோ குற்றச்சாட்டுகளை முன்வைக்கவில்லை. அமைச்சரவையில் அங்கம் வகித்தவர்களே கடுமையான குற்றச்சாட்டுகளை முன்வைத்தனர். நெருக்கடி நிலைமைக்கான காரணங்களை அம்பலப்படுத்தினர். அரச தலைவர், அதற்குப் பதிலளித்தே நாட்டு மக்களுக்கு உரையாற்றி இருக்க வேண்டும்.

நம்பிக்கையில்லாப் பிரேரணை, குற்றப்பிரேரணைக்கான முனைப்புகள் தீவிரமாகி வரும் நிலையில், தம்பியைக் காப்பாற்றும் தமையனது இறுதி முயற்சியாகக்கூட, பிரதமரின் உரை இருந்திருக்கலாம். கடந்த அரசாங்கமே, தவறுகளைச் செய்திருந்தாலும், ஆட்சியிலிருக்கும் அரசாங்கமே பொறுப்புக்கூற வேண்டும் என்பதை விளங்கிக்கொண்டு, நாட்டையும் மக்களையும் காப்பாற்றுவதற்கான முயற்சியை கூடிய வேகத்தில் முன்னெடுக்கவேண்டும்.

ஆகையால், ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுப்பதே, காலத்தின் தேவையாகும். வரப்பிரசாதங்களைக் கொடுத்து, காய்களை நகர்த்துவதும் மக்களின் மனங்களை வெல்ல நினைப்பதும் நீண்டகாலத்துக்கு நிலைக்காது என்பதை நினைவூட்டுகிறோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

நீண்ட காலமாக இருந்த நண்பர், இடைநடுவில் விட்டுச் சென்ற பின்னர், இடையில் வந்த ஒருவர், தனித்து நின்றவருக்கு நண்பராகவும் வரக்கூடும். இதே நண்பர், கேளாமலே வேதனைக்கு மருந்தாகப் பல்வேறு உதவிகளைச் செய்வது அன்பின் நிலையாகும்.

பலருடன் பழகினாலும் நல்ல நண்பர்கள் எவர், சுயநலத்துக்காக தோழமையுடன் வருபவர் யார் என்பவற்றை முதலில் கண்டுபிடிக்க முடியாமல் இருந்தாலும், காலப்போக்கில் உண்மையான இயல்பை கண்டுபிடித்து விடலாம்.

உண்மையான நட்பை, எக்காலமும் மறக்க முடியாது. இளமைக் காலத்தில் எங்களோடு பழகியவர்களை நாங்கள் மறப்பதுண்டு. காலமாற்றப் பிரிவுகள், குடும்பபாரம், கல்வி, தொழில்வாய்ப்புகள் போன்ற காரணங்களால், நட்பை விட்டு விலகிவிடுவதுண்டு.

சில சமயங்களில், உறவினர்கள்போல, நண்பர்களும் வசதிகள் ஏற்பட்டதும் முழுமையாகப் பழைய நட்பை நிராகரித்துவிடுவது உண்டு.

இன்பம், துன்பங்களின் போது எம்மோடு இணைந்திருப்பவர்கள், எமது நண்பர்களாவர். தோழமைகளைக் கண்போல் பாதுகாக்க வேண்டும். நட்பு, எங்களைத் தொடர்ந்து வரும் இணையில்லாத சொத்து.

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# நிபுணர்களும் தடுமாறும் நிலை



எம்.எஸ்.எம். ஐயூப்

சில வேளைகளில் வரலாறு விசித்திரமானது; சிலவேளைகளில் விந்தையானது. 2019ஆம் ஆண்டு, உயிர்த்த ஞாயிறு தினத்தன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்களைப் பயன்படுத்தி, இனவாதத்தைத் தூண்டி பதவிக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் அவரது அரசாங்கமும், இன்று அதே தாக்குதலுக்கு பதிலளிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளமை விந்தையானது.

இந்தக் கொடூர தாக்குதலைப் பயன்படுத்தி பதவிக்கு வந்த இந்த அரசாங்கத்துக்கு, மூன்று மாதங்களுக்கு மேல் நிம்மதியாக பதவியில் இருக்க முடியவில்லை என, சனிக்கிழமை (09) நீர்கொழும்பில் நடைபெற்ற அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்றின் போது, கார்தினால் மெல்கம் ரஞ்ஜித் ஆண்டகை கூறினார்.

அதேவேளை, "உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சாபமே, இந்த அரசாங்கத்தை பிடித்துள்ளது" எனப் பௌத்தரும் நாடாளுமன்ற உறுப்பினருமான குமார வெலகம, அண்மையில் நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது கூறினார்.

அன்று இந்தத் தாக்குதலைப் பாவித்து, இஸ்லாத்தை ஓர் அரக்க சமயமாகவும் முஸ்லிம்களை மிலேச்சத் தனம்மிக்க சமூகமாகவும் சித்திரித்து, சிங்கள மக்கள் மத்தியில் பாதுகாப்பற்ற மனநிலையை உருவாக்கி, தேர்தலில் வெற்றி பெற்ற ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையே, அத்தாக்குதலுக்குப் பொறுப்புக் கூற வேண்டும் என்ற தோரணையிலேயே, கார்தினாலும் கிறிஸ்தவ மக்களும் இன்று கருத்து வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

அன்று, நாட்டை யாரோ கைப்பற்றிக் கொள்ளப் போகிறார்கள் என்பதைப் போல, நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளவென கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் பொதுஜன பெரமுனவுக்கும் வாக்களித்த மக்களே, இன்று வீதியில் இறங்கி இரவிலும் பகலிலும் கடும் மழையிலும், அதே தலைவரிடமிருந்தும் அதே அரசாங்கத்திடமிருந்தும் நாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனக் கோஷமிட்டவாறு ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

அன்று, பொதுஜன பெரமுனவினரின் இனவாதப் பிரசாரங்களைத் தலைமேல் ஏற்று, அவர்களுக்கு வாக்களித்தவர்களில் பலர் இன்று, "ராஜபக்ஷர்கள் திருடர்கள்" என்றும் இனிமேல் தாம் இனவாதப் பிரசாரங்களுக்கு இரையாகப் போவதில்லை என்றும் கோஷம் எழுப்புகின்றனர்.

அன்று இனவாதப் பிரசாரங்களால் உந்தப்பட்டு, இலட்சக் கணக்கு ரூபாயைச் செலவழித்து, கோட்டாபயவுக்கு வாக்களிக்க வெளிநாடுகளில் இருந்து வந்த இலங்கையர்கள், இன்று அதே கோட்டாபயவுக்கு எதிராகத் தாம் வாழும் நாடுகளில் வீதிகளில் ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள்.

உண்மையிலேயே, இந்த அரசாங்கம் தோல்வியடைந்துள்ளது. அரசாங்கம், இதுவரை பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு தேடி, தாம் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதில்லை எனக் கூறி வந்தது. ஆனால், இப்போது வேறு வழியின்றி, அந்நிதியின் மீதே முழு எதிர்பார்ப்பையும் வைத்திருக்கிறது.

அமைச்சரவைக்கு வெளியே அரசாங்கத்தை விமர்சித்ததற்காக ஜனாதிபதி, மார்ச் மூன்றாம் திகதி தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்சவையும் பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பிலவையும் அமைச்சர் பதவிகளில் இருந்து நீக்கினார். இந்த நிலையில், பொருளாதார நெருக்கடியின் காரணமாக, மக்கள் ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்கவே, அந்த இருவரும் உள்ளிட்ட, தமக்கு தேர்தலில் வெற்றி பெற உதவிய 11 சிறிய கட்சிகளின் தலைவர்களுடன் ஏப்ரல் மூன்றாம் திகதி, ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தினார்.

அவர்கள், "பல கட்சி அமைச்சரவையை அமைத்து, சகல கட்சிகளினதும் கருத்துகளை அறிந்து, தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண வேண்டும்" எனக் கூறியிருந்தனர். அதன்படி, ஜனாதிபதி அன்றே பிரதமர் தவிர்ந்த, தமது அமைச்சர்களை இராஜினாமாச் செய்யுமாறு பணித்து, மறுநாள், அமைச்சரவையில் இணையுமாறு நாடாளுமன்றத்திலுள்ள ஏனைய கட்சிகளுக்கு அழைப்பு விடுத்தார்.

இதில் உள்ள விசித்திரமானதோர் அம்சம் என்னவென்றால், அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை என்று வெளியேற்றிய இரண்டு அமைச்சர்களின் ஆலோசனைப்படி, அரசாங்கத்துக்கு விசுவாசமாக நடந்து கொண்ட அமைச்சர்கள் அனைவரையும், ஜனாதிபதி பதவி துறக்கச் செய்தமையாகும். இது, அரசாங்கத்தின் தோல்வி அல்லாமல் வேறொன்றுமல்ல.

அதேவேளை, நாட்டில் உள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் எதிர்க்கட்சிகளே காரணம் என, அரசாங்கம் இதுவரை காலமும் கூறி வந்தது. ஆனால், இப்போது ஜனாதிபதி தமது அமைச்சர்களை பதவி நீக்கம் செய்துவிட்டு, அந்த எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் அமைச்சரவையில் இணைய வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார். இதுவும் அரசாங்கம், தனது இயலாமையை ஏற்றுக் கொண்டமையின் வெளிப்பாடேயாகும்.

நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல், அரசாங்கம் எதிர்க்கட்சிகளின் உதவியை நாடிய போதிலும், இன்னமும் அக்கட்சிகள் எதுவும் அமைச்சரவையில் இணைய முன்வரவில்லை. மற்றொரு விந்தையான விடயம் என்னவென்றால், மீண்டும் அமைச்சரவையில் இணைந்து கொள்ளும் உத்தியாக, தற்காலிக இடைக்கால அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும் எனக் கூறிய விமல், கம்மன்பில ஆகியோராவது அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க முன்வரவில்லை.

அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க அவர்களுக்கு விருப்பம் இருக்கலாம். ஆனால், மக்கள் நடத்தும் ஆர்ப்பாட்டங்களின் காரணமாக, நிலைமை மாறலாம் என்ற அச்சத்தாலும் ஐக்கிய மக்கள் சக்தி, மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகள், அமைச்சுப் பொறுப்புகளை ஏற்க முன்வராததால், தாம் நகைப்புக்குள்ளாகலாம் என்ற அச்சத்தாலும் அவர்கள் ஒதுங்கி இருப்பதாகவும் கருத முடியும்.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியைப் பெறும் அரசாங்கத்தின் முடிவை, மத்திய வங்கியின் ஆளுநராக இருந்த அஜித் நிவாட் கப்ரால் விரும்பவில்லை. அத்தோடு, நாட்டின் நிலைமையைச் சீர்செய்யத் தம்மால் முடியாது என்பதையும் அவர் உணர்ந்தார். அதனாலேயே, அவர் அமைச்சர்கள் சகலரும் இராஜினாமாச் செய்தவுடன் அமைச்சர்களைப் பின்பற்றி, தாமும் இராஜினாமாச் செய்வதாகக் கூறி பதவி விலகினார்.

கடந்த வாரம், அமைச்சர்கள் கூட்டாக பதவி விலகியதை அடுத்து, ஜனாதிபதி தற்காலிகமாக நான்கு அமைச்சர்களை நியமித்தார். நிதி அமைச்சராக புதிதாக நியமிக்கப்பட்ட அலி சப்ரி, மறுநாள் இராஜினாமாச் செய்தார். ஆனால், ஜனாதிபதி அவரது இராஜினாமாவை ஏற்கவில்லை. எனினும், ராஜபக்ஷ குடும்பத்தின் நீண்டகால நண்பரான கப்ராலின் இராஜினாமாவை ஜனாதிபதி ஏற்றார்.

அதையடுத்து, மத்திய வங்கியின் முன்னாள் சிரேஷ்ட பிரதி ஆளுநராக இருந்து ஓய்வு பெற்று அவுஸ்திரேலியாவில் வாழ்ந்த கலாநிதி நந்தலால் வீரசிங்கவை மத்திய வங்கி ஆளுநராக ஜனாதிபதி நியமித்தார். பதவியேற்றவுடன் கருத்து வெளியிட்ட கலாநிதி வீரசிங்க, "வெளிநாட்டுக் கடன்களை திருப்பிச் செலுத்துவதை ஒத்திப்போடுவது தொடர்பாக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்று 2020ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதமே கூறியிருந்தேன். ஆனால், அதைச் சம்பந்தப்பட்டவர்கள் ஏற்கவில்லை. அந்தப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்குமாறு, ஒரு மாதத்துக்கு முன்னர் ஜனாதிபதி ஆலோசனை வழங்கி இருந்தும், அந்த விடயத்தில் எதுவும் நடந்ததாக தெரியவில்லை" என்றும் கூறினார்.

இந்த விடயத்தை தாமும் முன்கூட்டியே கூறியதாகவும் அதனை எவரும் பொருட்படுத்தவில்லை என்றும் புதிய நிதி அமைச்சர் அலி சப்ரியும் மற்றொரு சந்தர்ப்பத்தில் கூறினார்.

அவ்வாறாயின், கடன் பொறியிலிருந்து தப்பித்துக் கொள்ள இருக்கும் ஒரே வழியை, இவ்வளவு காலம் தடுத்துக் கொண்டு இருந்தவர்கள் யார்? அவர்கள் நாடு இப்போது தள்ளப்பட்டு இருக்கும் நெருக்கடி நிலைக்கு பொறுப்பை ஏற்பார்களா? இல்லை, பொறுப்புக்கூறல் என்பது இலங்கைக்கு அந்நியமானதாயிற்றே!

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதாக இருந்தால், மத்திய வங்கியின் விடயங்களில் அரசியல் தலையீடு இருக்கக் கூடாது என்றும் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மை இருக்க வேண்டும் என்றும் மத்திய வங்கியின் புதிய ஆளுநர் கூறினார். புதிய நிதி அமைச்சரும் அரசியல் ஸ்திரத்தன்மையை வலியுறுத்தினார். இது ஜனாதிபதியின் பொறுப்பாகும்.

ஆனால், நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை, ஜனாதிபதி எவ்வாறு கொண்டுவருவார் என்பது விளங்கவில்லை. ஒருபுறம் கட்சிசார்பற்ற இளைஞர்கள் ஜனாதிபதியினதும் அரசாங்கத்தினதும் இராஜினாமாவைக் கோரி, கடந்த ஒரு வாரத்துக்கு மேலாகத் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

காலிமுகத்திடலில் அவர்கள் கடந்த ஐந்து நாள்களாக, கூடாரமிட்டுக் கொண்டு இராப்பகலாக ஆர்ப்பாட்டம் நடத்துகிறார்கள். இவ்வாறானதொரு நிலைமை, வரலாற்றில் ஒரு காலத்திலும் இருக்கவில்லை.

அதேவேளை, ஒன்றுக்கொன்று முரணான அரசியல் கருத்துகளையும் பல்வேறுபட்ட தனிப்பட்ட நோக்கங்களையும் கொண்டவர்களை ஒன்று சேர்த்து, பல கட்சி இடைக்கால அமைச்சரவையை அமைக்க ஜனாதிபதி முயல்கிறார். அதற்கும் எதிர்க்கட்சிகள் உறுப்பினர்களை நியமிக்க மாட்டார்கள் போல்த்தான் தெரிகிறது.

எதிர்க்கட்சிகள், அரசாங்கத்துக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையையும் ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையையும் கொண்டு வரத் தயாராகின்றன. திங்கட்கிழமை (11) நாட்டு மக்களுக்கு விசேட உரை நிகழ்த்திய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, "தற்போதைய மின்சார நெருக்கடிக்கு எதிர்க்கட்சிகளே காரணம்" என்றார். இந்நிலையில் எதிர்க்கட்சிகள், கூட்டு அமைச்சரவைக்காக அரசாங்கத்துடன் இணைவது சாத்தியமில்லை.

அவ்வாறாயின், ஜனாதிபதி எவ்வாறு நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவார்? எவ்வாறு கடன் சுமைக்கு பரிகாரம் கண்டு, அதன் மூலம் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பார்? வெல்கம எம்.பி கூறியதைப் போல், "இது சாபமா"? ஏனெனில், துறைசார் நிபுணர்களும் தடுமாறும் நிலைமையாகும்.

## கடிதங்கள்

### எரிபொருள் நிரப்பு நிலையம்: பொதுமக்கள் விசனம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் எரிபொருட்களை பெறுவதில், பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுவரும் நிலையில், சில எரிபொருள் நிரப்பு நிலையங்களின் செயற்பாடுகள், பொதுமக்கள் மத்தியில் விசனத்தை ஏற்படுத்தி வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்தில், நீண்ட வரிசைகளிலிருந்தே பொதுமக்கள் எரிபொருட்களை பெற்றுக்கொள்ளும் நிலை உள்ளது. மட்டக்களப்பு, ஊறணி எரிபொருள் நிரப்பு நிலையத்தில், எரிபொருள் நிலையத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையே முறுகல் நிலை அண்மையில் ஏற்பட்டது. அதற்குக் காரணம், அதிகாலையில் தொழில்களுக்காகச் செல்பவர்கள், குறித்த எரிபொருள் நிலையத்துக்கு வருகைதந்த போதிலும், "எரிபொருள் இல்லை" என்று திருப்பியனுப்பிய நிலையில், சில கார்களுக்கு எரிபொருள் நிரப்பப்பட்டது. இதைக் கண்ட மக்கள், அது தொடர்பில் கேள்வியெழுப்பினார்கள்.

எனினும், வைத்தியர்கள் உட்பட அத்தியாவசிய தேவைக்காக செல்வோருக்கு மட்டும், எரிபொருள் வழங்குவதாக, அந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தைச் சேர்ந்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.


தாங்கள், காலை வேளையில் சென்று தமது தொழிலைச் செய்தால்தான், தமது குடும்பத்துக்கு உணவு வழங்கமுடியும். பெற்றோல் இல்லாத காரணத்தால், தமது தொழில் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது பொதுமக்கள் விசனம் தெரிவித்தனர்.

வா. கிருஸ்ணா

புதுடெல்லி

# காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் அமைதியை விவாதிக்க முடியாது

## பாகிஸ்தான் பிரதமருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிய மோடி




பாகிஸ்தானின் 23ஆவது பிரதமராகப் பதவியேற்றுக் கொண்டுள்ள ஷெபாஸ் ஷெரீப், தனது முதல் உரையில், 'காஷ்மீர் பிரச்சினைக்கு தீர்வு காணாமல் அமைதியை விவாதிக்க முடியாது' என்று கூறியிருந்த நிலையில், 'அமைதியை நிலைநாட்டாமல் வளர்ச்சி காண முடியாது' என்று வாழ்த்துச் செய்தி அனுப்பியுள்ளார் பிரதமர் நரேந்திர மோடி.


மோடி தனது ட்விட்டரில், 'பாகிஸ்தானின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட மியான் முஹமது ஷெபாஸ் ஷெரீபுக்கு எனது வாழ்த்துகள். பாகிஸ்தான் பயங்கரவாதம் இல்லாத பிராந்தியமாகவும் அமைதியும் ஸ்திரத்தன்மையும் நிலைக்கும் பகுதியாக இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது. அமைதியிருந்தால் வளர்ச்சிக்கான சவால்களை எதிர்கொண்டு, மக்களின் நலனையும் வளத்தையும் உறுதி செய்யலாம்' என்று குறிப்பிட்டுள்ளார்.

பிரதமராகத் தெரிவு செய்யப்பட்ட பின்னர், பாகிஸ்தான் பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஷெபாஸ் ஷெரீப், "இந்தியாவுடன் நல்ல உறவையே விரும்புகிறோம். ஆனால், காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு காணாமல் அமைதியை விவாதிக்க முடியாது. காஷ்மீரில் 370ஆ வது பிரிவை இரத்து செய்யப்பட்ட விவகாரத்தில், காஷ்மீர் சகோதர சகோதரிகளுக்கு பாகிஸ்தான் தனது தார்மிக ஆதரவை வழங்கும். காஷ்மீர் மக்களின் விருப்பத்துக்கேற்றவாறு காஷ்மீர் பிரச்சினையை முடிவு செய்வோம். இருநாடுகள் உடனான மோதலை முடிவுக்கு கொண்டுவந்து, வேலைவாய்ப்பை ஏற்படுத்துவோம், ; மக்களுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்துவோம்" என்று பேசியிருந்தார்.

சென்னை

# "தமிழ் தான் இணைப்பு மொழி"

## அமித்ஷாவுக்கு ஏ.ஆர். ரஹ்மான் பதில்



மத்திய அமைச்சர் அமித் ஷா தெரிவித்த இந்தி தொடர்பான கருத்துக்கு பதில் அளித்த இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான், "தமிழ் தான் இணைப்பு மொழி" எனக் கூறியுள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் மத்திய அமைச்சர் அமித் ஷா, "ஆங்கிலத்துக்கு மாற்றாக, இந்தியாவின் இணைப்பு மொழியாக இந்தி இருக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார். இவரது கருத்துக்கு எதிர்ப்புக் கிளம்பியது. "ஒரு மொழியை கற்பது தவறல்ல; அதைத் திணிப்பதை ஏற்க மாட்டோம்" எனப் பலரும் எதிர் கருத்து தெரிவித்தனர்.

முதலமைச்சர் ஸ்டாலின் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் திரையுலகப் பிரபலங்களும் இந்திக்கு எதிராகத் தங்களது கருத்துகளை முன் வைத்தனர். குறிப்பாக, இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான், இன்பத் தமிழ் எங்கள் உரிமைச் செம் பயிருக்கு வேர்'' என்ற பாரதிதாசனின் பாடலை குறிப்பிட்டு, தமிழின் அடையாளமான ழ' கரத்துடன் தமிழ்தாய் இருப்பது போன்ற ஒரு புகைப்படத்தைப் பதிவிட்டு,'தமிழணங்கு' எனப் பதிவிட்டார். இது பலரின் கவனத்தையும் ஈர்த்தது.

இந்நிலையில், இதுகுறித்து ஊடகவியலாளரிடம் பேசிய ரஹ்மான், "தமிழ் படங்களை எங்கு பார்த்தாலும் நாம் பெருமைப்பட வேண்டும். ஒரே இந்தியா தான்; வட இந்தியா, தென்னிந்தியா என்றில்லை. ஆனால், இந்தியாவின் இணைப்பு மொழியாக இந்தியை ஏற்க முடியாது. தமிழ்தான் இணைப்பு மொழி" என்றார் ரஹ்மான்.

புதுடெல்லி:

# காற்று மாசால் விரையும் மரணம்


## லண்டன் பல்கலை ஆய்வு அறிக்கை

அமெரிக்காவின் ஹாவார்ட் பல்கலைக்கழகம், இலண்டன் பல்கலைக்கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், ஆபிரிக்கா, ஆசியா, மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த, 46 நகரங்களின் காற்று மாசுபடுதல் குறித்து ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

2005ஆம் ஆண்டு முதல் 2018ஆம் ஆண்டு வரை, 'நாசா' மற்றும் ஐரோப்பிய செயற்கைக் கோள்கள் திரட்டிய தகவல்களின் அடிப்படையில், இந்த ஆய்வறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு: சென்னை, மும்பை, பெங்களூர் உள்ளிட்ட எட்டு இந்திய நகரங்களில், காற்று மாசுபாட்டால், ஒரு இலட்சத்துக்கும் அதிகமானோர், இயற்கை மரணத்துக்கு மாறாக, முன்னதாகவே உயிரிழந்து உள்ளனர் என்ற ஆச்சரியமான தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

சென்னை

# சிறப்பாக பணியாற்றிய 100 ஊழியர்களுக்கு கார் பரிசு



சென்னையில் உள்ள தகவல் தொழில்நுட்ப (ஐ.ரி) நிறுவனமான 'ஐரியாஸ் 2 ஐ.ரி' தனது 100 ஊழியர்களுக்கு கார்களை பரிசளித்து கௌரவித்துள்ளது. சென்னையை தலைமையிடமாக கொண்டு செயற்படும், 2009ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இந்நிறுவனம், தங்கள் ஊழியர்களுக்கு வித்தியாசமான பரிசுகளை வழங்கி ஊக்கப்படுத்துவது வழக்கம். இதுவரை ஐ போன், தங்க நாணயம் ஆகியவற்றை பரிசாக வழங்கிய இந்நிறுவனம், தற்போது காரை பரிசாக வழங்கியுள்ளது.

10 ஆண்டுகளுக்கு மேல் தங்கள் நிறுவனத்தில் அர்ப்பணிப்புடனும் விடா முயற்சியுடனும் பணியாற்றிய 100 ஊழியர்களை தெரிவு செய்து, அவர்களை ஊக்கப்படுத்தும் நோக்கில் கார்களை பரிசாக வழங்கியுள்ளது. "பணி செய்யும் நிறுவனத்திடம் இருந்து பரிசுகளை பெறுவது மிகப் பெரிய விடயம். அதிலும் கார் பரிசாக வழங்கப்பட்டது மிகப்பெரிய கௌரவம்" என மகிழ்ச்சி தெரிவிக்கும் ஊழியர்கள், இந்த நிறுவனத்தில் பணியாற்றுவதை பெருமையாக உணர்வதாக கூறினர்.

திருப்பூர்

# பொய் வழக்கு பதிந்து விபத்து காப்புறுதி பெற்றவர்களுக்கு சிறை

வாகன விபத்தில் பொய் வழக்கு பதிந்து, 10 இலட்சம் இந்திய ரூபாய் இழப்பீடு பெற்று மோசடி செய்த சட்டத்தரணிகள் உட்பட நான்கு பேருக்கு, திருப்பூர் நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது.

திருப்பூர் மாவட்டம், உடுமலையை அடுத்த மடத்துக்குளத்தைச் சேர்ந்தவர் பார்த்திபன் (வயது 40) சட்டத்தரணியாக தொழில்செய்கிறார். 2008ஆம் ஆண்டு, மடத்துக்குளம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் தடுமாறி விழுந்து காயமடைந்தார். விபத்தில் மோட்டார் சைக்கிளின் மீது மற்றொரு மோட்டார் சைக்கிள் மோதி விபத்து ஏற்பட்டதாக, மடத்துக்குளம் பொலிஸில் புகார் அளித்தார்.

> **10 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகையை, உடுமலை, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் 2011இல் வழங்கியது. அதன் பின்னர் காப்புறுதி நிறுவன அதிகாரிகள் நடத்திய ஆய்வில், இது மோசடி என்பது தெரியவந்தது. வழக்கு பதிவு செய்த பொலிஸார், விசாரணை மேற்கொண்டனர்**

இந்நிலையில், மோட்டார் வாகன விபத்தில் 10 இலட்சம் ரூபாய் இழப்பீடு கேட்டு, மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயத்தில் பார்த்திபன் வழக்கு தொடுத்தார். இதில், உடுமலையைச் சேர்ந்த சட்டத்தரணி மாணிக்கவாசகம் ஆஜரானார். பார்த்திபனுக்கு, 10 லட்சம் ரூபாய் இழப்பீடு தொகையை, உடுமலை, யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம் 2011இல் வழங்கியது.

அதன் பின்னர் காப்புறுதி நிறுவன அதிகாரிகள் நடத்திய ஆய்வில், இது மோசடி என்பது தெரியவந்தது. வழக்கு பதிவு செய்த பொலிஸார், இது குறித்து விசாரணை மேற்கொண்டு குற்றம் நிரூபிக்கப்பட்டதை அடுத்து, பார்த்திபன், மாணிக்கவாசகம், உடந்தையாக இருந்த முரளிதரன், ஆரம்பத்தில் முறைப்பாட்டை பதிவுசெய்த ஓய்வு பெற்ற பொலிஸ்காரர் ஆகியோருக்கு ஐந்தரை ஆண்டு சிறை தண்டனை விதிக்கப் பட்டது.



# சுபகிருது வருஷம் - 2022

### புத்தாண்டு பிறப்பு:

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை காலை 7.50 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை காலை 8.41 மணியளவில் சுபகிருது வருஷம் பிறக்கிறது.

### புத்தாடை நிறம்:

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, நல்ல சிவப்பு அல்லது மஞ்சள் நிறப் பட்டாடை அல்லது சிவப்பு கரை அமைந்த பட்டாடை. பவளம், புஸ்ப்பராகம் கொண்ட ஆபரணம்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, மஞ்சள் நிற பட்டு அல்லது மஞ்சள் கரை கொண்ட வெள்ளை வஸ்திரம். புஸ்ப்பராகம் கொண்ட ஆபரணம்.

### விஷுபுண்ணிய காலம்:

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, 14-04-2022 அதிகாலை 3.50 மணி முதல் முற்பகல் 11.50 மணி வரை.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி 14-04-2022 அதிகாலை 4.41 இல் இருந்து பகல் 12.41 வரை

### மருத்து நீர்:

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, விஷுபுண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய, சிரசில் கடப்பம் இலையும் காலில் கொன்றை இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, விஷுபுண்ணிய காலத்தில் குறிப்பிட்டுள்ள நேரத்திற்கமைய சிரசில் கொன்றை இலையும் காலில் புங்கம் இலையும் வைத்து ஸ்நானம் செய்ய வேண்டும்.



### தோஷ நட்சத்திரம்:

பரணி, மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம், பூராடம், உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்

### கைவிஷேச சுபநேரம்:

வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை பகல் 7.57 முதல் 8.47 வரை.

சித்திரை 2 ஆம் திகதி (15- 04-2022) வெள்ளிக்கிழமை பகல் 7.52 முதல் 9.51 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15-04-2022) வெள்ளிக்கிழமை இரவு 6.12 முதல் 8.12 வரை

திருக்கணித பஞ்சாங்கத்தின்படி, சித்திரை 1ஆம் திகதி (14-04-2022) வியாழக்கிழமை பகல் 8.50 முதல் 9.42 வரை

சித்திரை 2 ஆம் திகதி (15-04-2022) வெள்ளிக்கிழமை பகல் 8.35 முதல் 9.50 வரை

### சுபகிருது வருட புத்தாண்டின் இராசிகளுக்கான வரவு மற்றும் செலவு:

| இராசி | ஆதாயம் | விரயம் | பலன் |
|---|---|---|---|
| மேஷம் | 14 | 14 | சமசுகம் |
| ரிஷபம் | 8 | 8 | சமசுகம் |
| மிதுனம் | 11 | 5 | இலாபம் |
| கடகம் | 11 | 11 | சமசுகம் |
| சிம்மம் | 8 | 14 | நஷ்டம் |
| கன்னி | 11 | 5 | இலாபம் |
| துலாம் | 8 | 8 | சமசுகம் |
| விருச்சிகம் | 14 | 14 | சமசுகம் |
| தனுசு | 2 | 8 | நஷ்டம் |
| மகரம் | 5 | 2 | இலாபம் |
| கும்பம் | 5 | 2 | இலாபம் |
| மீனம் | 2 | 8 | நஷ்டம் |

### சுபகிருது வருஷ பலன்:


சுபகிருது தன்னிலே சோழதே சம்பாழ்

அபமாம் விலைகுறையு மான்சாம் - சுபமாகு

நாடெங்கு மாரிமிகு நல்வினை வுண்டாகுங்

கேடெங்கு மில்லையிதிற் கேள்

இந்தச் சுபகிருது எனும் வருஷத்தில் பூமியானது பல்வேறு விதமான விழாக்களால் பிரகாசிக்கும். அரசர்களும் கள்வர்களிடமிருந்து (மக்களுக்கு) அபயமளிப்பவர்களாகவும் சண்டையில் உற்சாகமுடையவர்களாகவும் இருப்பார்கள்.





## ஐ.பி.எல்:

# குஜராத்தை வென்ற சண்றைசர்ஸ்

இந்தியன் பிறீமியர் லீக்கில், மும்பையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற குஜராத் லயன்ஸுடனான போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத் வென்றது.

இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற சண்றைசர்ஸின் அணித்தலைவர் வில்லியம்ஸன், தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய குஜராத் குறிப்பிட்ட இடைவெளிகளில் புவ்னேஷ்வர் குமார், தங்கராசு நடராஜன், உம்ரான் மலிக்கிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தது. பின்னர் அணித்தலைவர் ஹர்டிக் பாண்டியாவின் ஆட்டமிழக்காத 50 (42), அபினவ் மனோகரின் 35 (21) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 162 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில், நடராஜன் 4-0-34-2, குமார் 4-0-37-2, மார்கோ ஜன்சன் 4-0-27-1, உம்ரான் மலிக் 4-0-39-1, வொஷிங்டன் சுந்தர் 3-0-14-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு, 163 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சண்றைசர்ஸ், வில்லியம்ஸனின் 57 (46), நிக்கலஸ் பூரானின் ஆட்டமிழக்காத 34 (18), அபிஷேக் ஷர்மாவின் 42 (32) ஓட்டங்களோடு 19.2 ஓவர்களில் வெற்றியிலக்கையடைந்தது. பாண்டியா 4-0-27-1, ரஷீட் கான் 4-0-28-1, மொஹமட் ஷமி 4-0-32-0 என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

இப்போட்டியின் நாயகனாக வில்லியம்ஸன் தெரிவானார்.

இந்நிலையில், பூனேயில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் மும்பை இந்தியன்ஸும், பஞ்சாப் கிங்ஸும் மோதவுள்ளன.





## 'பற்றில் ஒவ் த கோஸ்ரல் ஹொக்கியன்ஸ்' போட்டியில்

# வென்ற காரைதீவு லயன்ஸ்

■ சகா

காரைதீவு ஹொக்கி லயன்ஸ் கழகம், அமரர் திரு. திருமதி அருளானந்தம் ஞாபகார்த்தமாக நடத்திய 'பற்றில் ஒவ் த கோஸ்ரல் ஹொக்கியன்ஸ்' (Battle of the Coastal hockiens) போட்டியில் காரைதீவு லயன்ஸ் (Karaithivu Lions) அணி திருமலை கிங்ஸ் (Trinco Kings) அணியை தோற்கடித்து வெற்றிவாகை சூடியது.

அருளானந்தம் சமூக கலாசார மைய (ASCO) அனுசரணையுடன் நடத்திய 'பற்றில் ஒவ் த கோஸ்ரல் ஹொக்கியன்ஸ்' போட்டியானது, காரைதீவு விபுலாநந்த மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது.

சிநேகபூர்வமான இப்போட்டியில் காரைதீவு லயன்ஸ் மற்றும் றிங்கோ கிங்ஸ் அணியினர் கொட்டும் மழைக்கு மத்தியில் மோதிக்கொண்டனர்.

போட்டி முடிவில் 2-1 என்ற கோல் கணக்கில் காரைதீவு லயன்ஸ் அணி வெற்றிவாகை சூடியது.

# பார்சிலோனா செல்லும் லெவன்டோஸ்கி?


ஜேர்மனிய புண்டெஸ்லீகா கால்பந்தாட்டக் கழகமான பயேர்ண் மியூனிச்சின் முன்களவீரரான றொபேர்ட் லெவன்டோஸ்கியைக் கைச்சாத்திடுவதில் ஸ்பானிய லா லிகா கழகமான பார்சிலோனா ஆர்வமாயுள்ளதாய் தெரிவிக்கப்படுகிறது.

33 வயதான லெவன்டோஸ்கியுடனான மியூனிச்சுடனான ஒப்பந்தமானது அடுத்தாண்டுடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், லெவன்டோஸ்கிக்கு 30 மில்லியன் யூரோ தொடக்கம் 35 மில்லியன் யூரோ பெறுமதியிலான, ஒவ்வோராண்டும் 10 மில்லியன் அதிகரிக்கும் இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஒப்பந்தமொன்றை வழங்க பார்சிலோனா எதிர்பார்த்துள்ளது.



# பரிஸ் ஸா ஜெர்மைன் செல்லும் பொக்பா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட்டின் போல் பொக்பாவைக் கைச்சாத்திடுவதை பிரெஞ்சு லீக் 1 கழகமான பரிஸ் ஸா ஜெர்மைன் முன்னுரிமையளித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

29 வயதான பொக்பாவின் யுனைட்டெட்டுடனான ஒப்பந்தமானது நடப்பு பருவகாலத்துடன் முடிவடைகின்றமை குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து

# அதிரடி அறிவிப்பை வெளியிட்ட நியூசிலாந்து


உக்ரேன் மீது ரஷ்யப் படையினர் கடந்த பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதியிலிருந்து தீவிரமாகத் தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

அதேசமயம் ரஷ்யாவின் தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக அந்நாட்டின் மீது அமெரிக்கா, பிரித்தானிய உள்ளிட்ட பல நாடுகள் அடுக்கடுக்காகப் பொருளாதாரத் தடைகளை விதித்து வருவதோடு உக்ரேனுக்கு உதவும் வகையில் ஆயுதங்களையும் வழங்கி வருகின்றன.

அந்தவகையில் தற்போது நியூசிலாந்து அரசும் உக்ரேனுக்கு உதவும் வகையில் இராணுவ உபகரணங்கள் மற்றும் ஆயுதங்களை வழங்க இருப்பதாக அறிவித்துள்ளது.

மேலும், C-130 ஹெர்குலஸ் விமானத்தில் இராணுவ உபகரணங்களுடன், 58 வீரர்கள் ஐரோப்பாவுக்கு அனுப்பப்பட இருப்பதாக நியூசிலாந்து பாதுகாப்புத்துறை அமைச்சர் பீனி ஹெனேர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், உக்ரேன் இராணுவத்திற்கு உதவும் வகையிலும், சட்ட ரீதியிலான நடவடிக்கைகள் மற்றும் மனித உரிமைகள் தொடர்பான பிரச்சினைகளில் அந்நாட்டிற்கு உதவும் நோக்கிலும் கூடுதலாக 9 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியை ஒதுக்கீடு செய்ய இருப்பதாகவும் நியூசிலாந்து அரசு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



பிரித்தானியா

# 200 மில்லியனில் ஒருவருக்கே இப்படி நடக்கும்



பிரித்தானியாவின் லிவர்பூல் பகுதியில் வசித்து வரும் கிரேக் - ஜினா டியூட்னி தம்பதியினருக்கு கடந்த 2021ஆம் ஆண்டு 3 ஆண் குழந்தைகள் பிறந்துள்ளன.

பொதுவாக ஒரே பிரசவத்தில் பல குழந்தைகள் பிறப்பது வழக்கமானதொன்றாக இருந்தாலும், குறித்த தம்பதிக்கு ஒரே பிரசவத்தில் ஒரே மாதிரியான 3 ஆண் குழந்தைகள் (Identical triplet boys) பிறந்துள்ளமை வைத்தியர்களை அதிர்ச்சியடைய வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த வைத்தியர்கள் "இது போன்று ஒரே பிரசவத்தில் ஒரே மாதிரியான 3 குழந்தைகள் பிறக்கும் சந்தர்ப்பம் 200 மில்லியன் தம்பதிகளில் ஒருவருக்கு மாத்திரமே நிகழும்" என்றனர்.

இந்நிலையில் சமீபத்தில், தனது மூன்று மகன்களான ஜிம்மி, ஜென்சன், ஜாக்சன் ஆகியோரின் முதல் பிறந்தநாளை அத்தம்பதியினர் வெகு விமரிசையாக கொண்டாடியுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த கிரேக் "மூன்று குழந்தைகளுக்கும் உணவு ஊட்டுவது என்பது சவாலான காரியம். எனது மனைவி ஆரம்பத்தில் மிகுந்த கஷ்டப்பட்டார். ஆனால், இப்போது எங்களுக்கு பழகிவிட்டது. சொல்லப்போனால் எங்களுக்கு இது மிகவும் பிடித்திருக்கிறது. அவர்கள் தங்களது சிறிய வாழ்வில் நிறைய கற்றுக்கொண்டு வருகிறார்கள்.

அவர்களுக்குள் தங்களுக்கே உரித்தான மழலை மொழியில் பேசிக்கொள்கிறார்கள்" என்றார்.

இத் தம்பதி 'Cheshire Triplets' என்ற பெயரில் இன்ஸ்டாகிராம் பக்கம் ஒன்றினை ஆரம்பித்துள்ள நிலையில், இப் பக்கத்தை 20,000 பேருக்கும் மேற்பட்டோர் பின்தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது.



பஹ்ரேன்

# பீரங்கி குண்டுகள் முழங்க ரமழான் கொண்டாட்டம்

பீரங்கி குண்டுகள் முழக்கத்துடன் ரமழான் நோன்பைக் கொண்டாடும் பாரம்பரிய நிகழ்வானது பஹ்ரேனில் நடைபெற்றது.

பஹ்ரேனில் கடந்த இரண்டு ஆண்டுகளாக கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன.

இதையடுத்து, கட்டுப்பாடுகள் படிப்படியாகக் குறைந்ததை தொடர்ந்து, பீரங்கி குண்டுகள் முழக்கத்துடன் ரமழான் நோன்பை கொண்டாடும் பாரம்பரிய நிகழ்வானது நடைபெற்றது. இந்நிகழ்வைக் காண ஏராளமான மக்கள் தங்கள் குழந்தைகளுடன் வருகை தந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா

# மனைவிக்கு வரிவிலக்கு; நிதி அமைச்சருக்கு நெருக்கடி



பிரித்தானியாவின் நிதி அமைச்சராக ரிஷி சுனக் உள்ளார். இவர் இந்தியாவின் இன்போசிஸ் நிறுவனத்தின் இணை நிறுவனரான நாராயண மூர்த்தியின் மகளான அக்சதா மூர்த்தியை (42) திருமணம் செய்துள்ளார்.

இந்நிலையில், அண்மையில் பிரபல ஊடகமொன்று, அந்நாட்டில் உள்ள பணக்காரர்களின் பட்டியலை வெளியிட்டது. அப்பட்டியலில் பிரித்தானிய மாகா ராணி எலிசபெத்தின் தனிப்பட்ட சொத்து மதிப்பு இந்திய மதிப்பில் சுமார் 3,500 கோடி ரூபாய் எனவும் அக்சதா மூர்த்தியின் வசம் உள்ள இன்போசிஸ் பங்குகளின் மதிப்பு மாத்திரம் 7,000 கோடி ரூபாய் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இதைத் தவிர, சொந்த நிறுவனங்களில் இருந்து அக்சதா மூர்த்தி கோடிக்கணக்கில் வருவாய் ஈட்டி வருகிறார் எனவும், எனினும் அவர் பிரித்தானியாவின் குடியுரிமையைப் பெறாததால் வெளிநாட்டில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு பிரித்தானியாவின் விதிப்படி அவர் வரி செலுத்த வேண்டிய அவசியம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அவர் பிரித்தானியாவின் குடியுரிமை பெறாமல் அந்நாட்டில் வசிப்பது மற்றும் வெளிநாட்டு வருமானத்திற்கு வரி செலுத்தாதது உள்ளிட்டவை நிதியமைச்சர் ரிஷிக்கு நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து பிரதமர் போரிஸ் ஜோன்சனுக்கு நிதி அமைச்சர் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார் எனவும், அதில் தான் அமைச்சராக பொறுப்பேற்ற போதே, தன்னுடைய சொத்து விவரங்கள் குறித்து அனைத்தையும் தெரிவித்து விட்டதாகவும் தேவைப்பட்டால் அதனை மறுஆய்வு செய்து கொள்ளுமாறும் அவர் தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகின்றது.

நேபாளம்

# நெருக்கடியில் நேபாளம்

நேபாளத்தில் இறக்குமதி உயர்வால் 2021ஆம் ஆண்டு ஜூலை முதல் அந்நிய செலவாணி கையிருப்பு குறையத் தொடங்கியுள்ளதாகவும், அதேபோல் ஏற்றுமதி மற்றும் சுற்றுலா துறைகள் மூலம் ஈட்டப்படும் வருவாயும் குறைய ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் நேபாள மத்திய வங்கியில் குறைந்தபட்சம் 7 மாதங்களாக இறக்குமதிக்கான அந்நிய செலவாணி கையிருப்பு நிர்ணயிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது அது 6.7 மாதங்களாக குறைந்துள்ளதாகவும், இதனால் இலங்கையை போலவே நேபாளமும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேபாள மத்திய வங்கி அத்தியாவசியமற்ற விலை உயர்ந்த ஆடம்பர பொருட்களை இறக்குமதி செய்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டால் புதன்கிழமை, 13 ஏப்ரல் 2022, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு-02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.